சிந்தனைக் கவிஞர்
பெரி. சிவனடியான்



முனைவர் மு. பழனியப்பன்

WITH COURAGE AND FAITH

சிந்தனைக் கவிஞர் பெரி. சிவனடியான்

முனைவர் மு. பழனியப்பன்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் அரங்க பாரி
முனைவர் தி. குமார்

முனைவர் ஆர். மோகனதாஸ்
முனைவர் எல். குமரன்
முனைவர் கிருஷ்ணன் மணியம்

முனைவர் ஒப்பிலா. மதிவாணன்
முனைவர் அமிதா சபாபதி

தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

கலைஞன் பதிப்பகம்
19, கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்,
சென்னை - 600 017.

இந்திய ஆய்வில் துறை
மலாயாப் பல்கலைக்கழகம்

Rs. 75.00

SINDHAI KAVI PERI SIVANADIYAN

By

Mu. Pazhaniyappan

First Edition : 2016

Published by :

KALAIGNAAN PATHIPAGAM

19, Kannadhasan Salai
T. Nagar, Chennai - 600 017.
Ph : 044 - 2434 5641, 2431 3221.

Typeset by

Classic Designs,

Chennai - 600 017.

Printed at

M.K. Graphics,
Chennai - 600 021.

ISBN : 978 - 93 - 88265 - 04 - 1

பதிப்பாசிரியர்கள் உரை

தமிழ் இலக்கிய மரபில் கவிதைக்கலை தொன்மைக்காலந் தொட்டு மரபாக இருந்து வரும் ஒருகலைக்கூறு ஆகும். பாட்டு-செய்யுள்-மரபுக்கவிதை-புதுக்கவிதை என ஒவ்வொரு காலகட்டத்திலும் கவிதை தன் வடிவமாற்றக்கூறுகளைப் பெற்று வளர்ச்சியடைந்து வந்துள்ளது. உரைநடை வளர்ச்சிப் பெற்ற பின்னர் உரைநடையால் படைக்கப்பெறும் கலைக்கூறுகள் இலக்கியமாக வகைப்படுத்தப் பெற்றன. இவ்வாறு செய்யுள், கவிதை, உரைநடை வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டோர் பலராவர். அவர்கள் காலத்தால், இடத்தால், செய்யும் பணி வெவ்வேறு வகையினராக அமைந்திருந்தாலும் அவர்கள் தமிழால் ஒன்றிணைந்துள்ளனர். அவர்களில் பலரது வாழ்வியலும், இலக்கியப் பணியும் இலக்கிய வரலாற்றில் முழுமையாகப் பதிவு செய்யப்படாமல் இருந்து வந்துள்ளது.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, தமிழால் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழறிஞர்களை உலகம் முழுவதும் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள் முன் கொண்டுசேர்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

புலமை மிக்க தமிழறிஞர்களின் பணிகளை ஆவணப்படுத்தும் அரிய முயற்சியில் கலைஞன் பதிப்பகம் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. அதனுடன் தமிழுக்குத் தரணியெங்கும் புகழ் சேர்த்துக் கொண்டிருக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறையும், அயலகத் தமிழர்களை ஒருங்கிணைத்துத் தமிழ் வளர்க்கும் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையும் கைகோர்த்து இம்மகத்தான பணியினைச் செயலாற்றுகின்றது.

சென்ற ஆண்டில் (2015) ஒரே நாளில் 351 தமிழறிஞர்களின் தமிழ்ப்பணியினை நூலாக்கமாக வெளியிட்டுச் சாதனை படைத்தது. அந்தச் சாதனைப் பயணத்தில் மீண்டும் ஒரு சாதனையாக இப்பதிப்பு முயற்சி அமைவதில் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றோம்.

பதிப்பாசிரியர்கள்

பதிப்புரை

பார் போற்றும் கலைக்கூடமான அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறையும், மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையும், சென்னை கலைஞன் பதிப்பகமும் இணைந்து தமிழறிஞர்கள் - 351 என்ற தலைப்பில் சென்ற ஆண்டில் உலகமெங்கும் பரவிக் கிடக்கும் தமிழறிஞர்களை தமிழுலகிற்கு அறிமுகம் செய்து சிறப்பித்தது.

அவ்விழாவின் போதே அடுத்தகட்டமாக 'கவிஞர்கள் - பாடலாசிரியர்கள்' பற்றிய பொருண்மையில் அடுத்த ஆண்டு பதிப்பாக்க முயற்சி நடைபெறும் என்று முறையாக அறிவிக்கப் பட்டு, அதன் விளைவாகத் தற்போது உலகம் முழுவதும் பரவியுள்ள கவிஞர்கள், பாடலாசிரியர்கள், தமிழறிஞர்கள் குறித்த நூலாக்கப் பணி வெளியாகின்றது. எண்ணுவதும் எழுவதும் எல்லோர்க்கும் எளிதான கலை அல்ல. அது சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் போன்றதாகும். மிகச்சிறந்த சிந்தனையாளர்கள் தம் சிந்தனைத் துளிகளைக் கவிதைகளாகச் சமூகத்தின் முன்னர் தவழ விட்டுள்ளனர். அவை வெளிச்சத்துக்கு வருவதற்கு இதுஓர் வாய்ப்பாக அமையும்.

மகாகவி பாரதியாரின் சிந்தனைத் துளிகளால் வேர்விட்டுக் கிளைத்தெழுந்த கவிதைக்கலை இன்றைக்கு வாழும் இலக்கியமாக இருந்து வருகின்றது. இன்றைக்குப் பல கவிஞர்கள் தத்தம் சிந்தனைக் கருத்துகளை வெளியிடுவதற்கு ஏற்ற பல வாய்ப்புக்கள் உள்ளன. அவ்வாறு வெளி உலகுக்குப் புலனாகாமல் விருட்சங்களாய் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் பல கவிஞர்கள் இந்த நூலாக்கப்பணியின் மூலம் எழுத்துலகில் நிலைத்து வாழ்வதற்கு வழி ஏற்பட்டுள்ளது என்பதனை எண்ணிப் பெருமிதமடைகின்றோம்.

தமிழுக்குச் செய்யும் பெரும்பணியாக இதனைக் கருதாமல் தமிழுக்குச் செய்ய வேண்டிய கடமைப்பணியாகக் கருதி இவற்றை வெளியிடுகின்றோம். எங்கள் தமிழ்ப்பணியில் தோளோடு தோள் நிற்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறை, மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறை ஆகிய நிறுவனங்களுக்குத் தமிழால் கடமைப்பட்டுள்ளோம். நூலாக்கம் செய்யும் பணிக்குத் துணைநின்ற பதிப்பாசிரியர்கள், நூலாசிரியர்கள், அச்சாக்கம் செய்த நிறுவனத்தினர் ஆகிய அனைவர்க்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பதிப்பகத்தார்

கவிஞரைக் கற்றபோது..

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ் வளர்க்கும் பல்கலைக்கழகம். அதில் பயின்றோரும் பயில்வோரும் பயிற்றுவித்தோரும் பயிற்றுவிப்போரும் அண்ணாமலையின் பெருமைக்கு மேலும் பெருமை சேர்த்தவர்களே ஆவார். இதன் காரணமாகப் பெருமையின் இருப்பிடமாக என்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் விளங்குகின்றது. புகழ் பூத்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்றவர்களுள் ஒருவர் கவிஞர் பெரி. சிவனடியான். தன் பல்கலைக்கழகப் பிள்ளையைத் தானே அரவணைத்துக் கொள்ளும் நிலையை இன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. கவிஞர் இப்பல்கலைக்கழகத்தைப் பலபட பாராட்டியுள்ளார்.

கலைஞன் பதிப்பகம் ஓர் அமுதசுரபி. எப்படித்தான் இப்படிக் கற்பகச் சிந்தனைகள் அவர்களுக்குள் உதிக்கின்றன. அவற்றை எவ்வாறு அவர்கள் செயல்படுத்தி வெற்றி காண்கிறார்கள். எனக்கும் கலைஞன் பதிப்பகத்திற்கு நான்கு நூல்கள் அளவில் உறவு. அது இன்னமும் பலப்பட வேண்டும். மாசிலா மணிக்குள் மணியாக ஐக்கியமாகவேண்டும்.

கவிஞர் பெரி. சிவடியானின் ஊர் வீரசேகரபுரம் என்றாலும் இவர் குடிபெயர்ந்தது புதுவயலுக்கு. புதுவயல் என் சொந்த ஊர். இவ்வூரில் எங்கள் வீட்டின் பக்கத்துத் தெருவில் வாழ்ந்தவர் பெரி. சிவனடியான். இவர் எங்கள் ஊர் சரசுவதி சங்கத்துப் பள்ளியில் பயின்றவர். நல்ல கவிதைகளை வளமாகச் சொல்லுபவர். மேடைகளில் இனிக்க நகைச்சுவை பொங்கப் பேசுபவர். இவரிடம் சில பொழுதுகளில் இலக்கியச் சரக்குகள் வாங்கி அவற்றை மேடையில் பேசிய அனுபவம் எனக்கு உண்டு. இவரின் எழுத்துக்கள் தனித்திறம் வாய்ந்தவை. மையூற்றுப் பேனாவில் சிந்தனை முடிச்சுகளாக அவை இருக்கும். அவரின் எழுத்தும்

அவரும் ஒரே நேரத்தில் என் சிறுவயதில் அறிமுகமானது. அவ்வறிமுகம் கருதி எங்கள் ஊர் கவிஞர் ஒருவரைப் பற்றி நூல் ஒன்று எழுத நல்வாய்ப்பு கிடைத்தது. அதனைச் சிக்கெனப் பற்றிக்கொண்டேன்.

சிந்தனைக் கவிஞர் பெரி. சிவனடியான் என்ற தலைப்பில் அவரின் வாழ்க்கையை, அவரின் இலக்கியத் தடத்தை இந்நூல் எடுத்துரைக்கிறது. இந்நூல் எழுதத் துணை செய்தவர்கள் கவிஞரின் குடும்பத்தினர். அவரின் அத்தனை நூல்களையும் என்னை நம்பி எனக்களித்தார்கள். அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கவேண்டியது என் பணி.

கவிஞர் பெரி. சிவனடியான் குடும்பத்தாரை நேர்முகமாகச் சந்தித்து எனக்கு நூல்கள் பெற்றுத் தந்தவர் விழுப்புரம் கம்பன் கழகச் செயலர் கவிஞர் திரு. மு.க. சங்கரன். அவர்களிடம் பெரி. சி. பற்றி நூலெழுத வேண்டும் என்றதும் என் ஆர்வத்தை மதித்து அதற்கு ஆவன செய்வதாக அவர் உறுதியளித்தார். அவ்வகையில் இந்நூல் உருவாக அவரின் துணை மிக இனிது.

அரசு கல்லூரி ஆசிரியர், தமிழ்ப் படித்தவர், விதி விளையாடல்களை ஏற்றுக் கொண்டவர் என்ற அடிப்படையில் அவருக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை அவரின் படைப்புகளில் முதலில் அறிந்து கொண்டேன்.

அவரின் அனுபவங்கள் எனக்கு ஆறுதல் அளித்தன. குடத்துவிளக்காகத் தான் இருந்துவிடக் கூடாது என்பதற்காக அவர் நிறைய எழுதி இருக்கிறார். நிறைய உழைத்து இருக்கிறார். இவ்விளக்கைக் குன்றில் இட்ட விளக்காக ஆக்க இந்நூல் துணை செய்யும்.

கவிஞர் பெரி. சி பற்றி நூல் எழுதுகிறேன் என்றதும் மகிழ்ந்து ஆசியளித்தவர்கள் என் பெற்றோர் முனைவர் பழ, முத்தப்பன் அவர்களும், திருமதி மு. அழகம்மை அவர்களும். எனக்கு நேரமளித்து ஊக்கமளித்தவர்கள் என் இணை க. விஜயலட்சுமியும், என் மக்கள் அழகம்மையும், வள்ளியம்மையும்.

நூல் எழுதியதைக் கண்ணுற்றுச் சரி செய்தவர்கள் நண்பர்கள் சிங்கமுத்துவும், சேதுபதியும்.

இன்னும் எழுதலாம் என்ற நிலையில் வளரும் புகழ் கொண்டவர் கவிஞர். அவரை நினைவு கூர நன்னூல் இந்நூல். படைத்தவனின் வேண்டுகோள் படியுங்கள்.

அன்புடன்

மு.பழனியப்பன்

பொருளடக்கம்

புதுவயலில் விளைந்திட்ட தமிழ்க்கவி

படைப்புத் தொழில் புரிபவர் பிரம்மதேவர் என்பது புராணக் கருத்து. இக்கருத்தினை ஏற்பவர் ஏற்கலாம். அல்லது மறுப்பவர் மறுக்கலாம். ஆனால் அவருக்கு வழங்கப்பெற்றுள்ள குறியீடு உருவம் ஆகியனவற்றுக்குள் ஓர் அர்த்தம் இருப்பதை உணர்ந்தாக வேண்டும். பிரம்ம தேவர் நான்கு முகங்கள் கொண்டு விளங்குகிறார். இந்த நான்கு முகங்கள் எதற்காக அவருக்கு வழங்கப்பெற்றிருக்க வேண்டும். தன்னைச் சுற்றி நான்கு புறங்களிலும் நடக்கின்ற செயல்களை, நிகழ்வுகளை, பாதிப்புகளை, நல்லதுகளை, கெட்டதுகளை அறிந்து ஆய்ந்து அவர் படைப்புத் தொழிலைச் செய்யவேண்டும் என்பதற்காகத் தான்.

வெளியில் நடப்பவை படைக்கின்ற பிரம்மாவைப் பாதித்தாலும் படைக்கின்ற பொருளில் அவனின் தனித்தன்மை விளங்க வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு படைப்பும் ஒவ்வொரு வகையில் அமையும். எல்லாவற்றையும் ஒன்றேபோல் படைத்துவிட்டால் அது இயந்திரச்சாலை ஆகிவிடும். அங்குப் பொருள்கள்தான் உற்பத்தியாகும். இயந்திரத்தனம்தான் மேலோங்கும். ஒரேமாதிரியான பொம்மைகள் வெளிவரும். ஆனால் உலக உயிர்கள் அப்படிப் பட்ட பொம்மைகளாகப் படைக்கப்பெற்றிடக் கூடாது. ஒவ்வொரு உயிருக்கும் தனித்தன்மை இருந்தாக வேண்டும். பல பொதுத்தன்மைகள் இருந்தபோதும் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு உயிருக்குமான தனித்தன்மை வாய்ந்ததாக அமையவேண்டும். இந்நிலையில் எண்ணிப் பார்த்தால் படைப்புத் தொழில் எவ்வளவு புதிரானது, எவ்வளவு தனித்தன்மை வாய்ந்தது என்பது தெரியவரும்.

இதனால் படைப்புக்கடவுளுக்குத் தனித்தன்மையும், சூழல்களுக்கு ஒட்டிப் படைப்புகளைப் படைக்கும்

இயைபுத்தன்மையும் இன்றியமையாததாகின்றது. உயிருலக பிரம்மா இதையெல்லாம் செய்கிறாரோ இல்லையோ படைப்புலக பிரம்மாக்கள் இவற்றை அறிந்துச் செயல்படுகிறார்கள்.

படைப்பாளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரம்மாதான். நான்கு புறங்களைக் கவனித்து நல்லதை மட்டுமே நடத்திக் காட்டுகிற தூய பிரம்மாக்கள். கவியரசு கண்ணதாசன் கவிஞன் யான் ஓர் காலக்கணிதம். கருப்படு பொருளை உருப்பட வைப்பவன் என்று தன் கவியாற்றலுக்கு வலிமை காட்டுவார். அவர் வழியில் பாட்டுக்கள் புனையவந்த கவிஞர்கள் பலர். தென்றல் என்ற இதழில் அவர் தான் அறிந்த கவிஞர்களின் கவிதைகளை வெளியிட்டு அக்கவிஞர்களுக்கு அடையாளம் தந்தார். கவியரங்க மேடைகளில் இக்கவிஞர்களுக்கு உரிய இடம் தந்துப் பாக்கள் புனையவைத்தார்.. கவியரங்குகளைச் சிறக்க வைத்தார். அவரின் கவியரங்கம் பல்வேறு எழுத்துலக பிரம்மாக்களை உருவாக்கியது.

கவிஞர் பெரி. சிவனடியான் படைப்பின் பெருமையைப் படைப்பாளரின் பெருமையைக் கவிஞனின் பெருமையைப் பின்வருமாறு பாடுகின்றார்.

நானொரு கவிஞன். நான் படைப்பாளி
ஆனதால் எதையும் ஆக்கிட முடியும்
மலையைக் கடுகாய் மாற்றிக் காட்டுவேன்
கடலை நின்றொரு கண்ணால் அளப்பேன்
காற்றை நினைத்தால் கைக்குள் அடக்குவேன்
பூமியை நானொரு பொழுதில் கடப்பேன்
இரவும் பகலும் எனக்கொரு பொழுதே
உறவும் பகையும் ஒன்றே எனக்கு
தன்மையும் தீமையும் நாளும் நடக்கும்
இன்பமும் துன்பமும் இல்லை என் வாழ்வில்
பசிக்கும் எனக்குப் பாட்டே சோறு
பண்ணே உண்ணும் பாயாசமாகும்
பரவசம் பரவசம் பாடலே பரவசம்
எண்ணினால் போதும் இதயம் சிலிர்க்கும்
கண்போல் அதனைக் காத்திடத் தோன்றும்
வாழ்வும் தாழ்வும் வரும்பின் போகும்

(பெரி.சிவனடியான், கனிக்குவியல். ப. 73)

இக்கவிதையின் வழியாக கவிஞர் பெரி. சிவனடியான் என்னும் கவியுலக பிரம்மாவின் காட்சி கிடைக்கிறது.

பசித்தாலும் பாடல் சுவைக்கிறது கவிஞருக்கு. காற்றை அடக்கும் வல்லமை கவிஞருக்குள் இருக்கிறது. பூமியை ஒரு பொழுதில் கடக்கும் தன்மை கவிஞருக்குக் கைவரப் பெற்றிருக்கிறது. எதையும் ஆக்கும் வலிமை கொண்டவன் கவிஞன். இதனால் கவிஞன் தன் வாழ்நாள் கடந்தும் நிற்கிறான். அவனின் கவிதை சிம்மாசனத்தில் இருந்து என்றும் ஆள்கிறது.

கவிஞர் பெரி. சிவனடியான் தன் தொடக்கப்பள்ளி நாள் முதல் வாழ்வின் நிறைவு நாள் வரை கவிதைகளை நெய்து கொண்டே இருந்தார். அவரின் உதடுகள் கவிதைகளை இனிமைபட மொழிந்து கொண்டே இருந்தன. அவரின் காதுகள் பாடல் ஒலிகளால் நிறைந்து கொண்டே இருந்தன.

கவிஞர் பெரி.சிவனடியான் ஒரு பாட்டுப் பறவை. இன்ப, துன்பங் கடந்துக் கவிதைப் பெருவெளியல் அவர் சுற்றி அலைந்து பறந்து திரிந்திருக்கிறார்.

பொன்னி இதழில் எழுதிய கவிஞர்களுள் ஒருவர் பெரி.சிவனடியான் ஆவார். இவர் சிந்தனைக் கவிஞர் என்று போற்றப்படுகிறார். இவர் சிறந்த கவிஞர். காவிய ஆசிரியர். நல்ல நாடக ஆசிரியர். நாடக இயக்குநர். குழந்தைகளுக்கான பாடல்களைப் பாடிய கவிஞர். உரைநடையாசிரியர். பக்திப்பாடல்கள் பலவற்றை எழுதிய ஆன்மீகக் கவிஞர். ஆசிரியர். கல்லூரிப் பேராசிரியர். பட்டிமண்டப, வழக்காடு மன்ற நடுவர். இத்தனைப் பன்முகங்கள் அவருக்கு உண்டு.

இவரின் வாழ்க்கை விதியோடு நடந்து சென்ற பயணம் ஆகும். அதனை அவரே பல இடங்களில் பதிவு செய்துள்ளார். இக்கவிஞரின் வாழ்க்கை, அவரின் இலக்கியப் பணிகள், படைப்புப் பணிகள் ஆகியவற்றைத் தொகுத்து நூலாகத் தரும் முயற்சி இந்த நூலாகும்.

பிறப்பும் வளர்வும்

சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள காரைக்குடி நகரத்தின் அருகாமையில் இருப்பது வீரசேகரபுரம் என்ற சிற்றூர்

ஆகும். இது காரைக்குடியிலிருந்து புதுவயல் வழியாகச் சாக்கோட்டை சென்றவுடன் அடுத்து அமைந்துள்ள ஊராகும். சாக்கோட்டையில் சிவகங்கை சமஸ்தானத்திற்கு உரிய அருள்தரு உமையாம்பிகை உடனமை வீரசேகரர் திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் உள்ள சிவபெருமானின் பெயர் வீரசேகரர் என்பதாகும். இவர் பெயரால் அமைந்த ஊர் வீரசேகரபுரம் ஆகும். தற்போது இவ்வூர் கருநாவல்குடி என்றும் அழைக்கப்பெற்றுவருகிறது.

இவ்வூரில் நகரத்தார் பெருமக்கள் பெருமளவில் வாழ்ந்து வந்தனர். காலச்சூழல் காரணமாக இவர்கள் புதுவயலுக்கு இடம் பெயர்ந்தனர். இருப்பினும் வீரசேகரபுரத்து தெய்வங்களையும் சாக்கோட்டை தெய்வங்களையும் இவர்கள் மறவாமல் இன்றளவும் வந்து வணங்கிச் செல்கின்றனர். அவ்வாறு இடம் பெயர்ந்த குடும்பங்களுள் ஒன்று கவிஞர் பெரி.சிவனடியான் குடும்பமும் ஆகும்.

வீரசேகரபுரத்தில் வாழ்ந்தவர் ராம. பெரி. சிவ. பெரி. சிவராமன் செட்டியார் இவர் பர்மாவில் வணிகம் செய்தவர். இவர் அமராவதிப் புதூர் என்ற ஊரில் உள்ள கருப்பர் கோயிலை அழகுபட கட்ட திட்டம் தீட்டி, அவ்வூர் அன்பர்களுடன் இணைந்து அப்பெரும்பணியைச் செய்து முடித்தார்.

இவரின் மகனார் சிவ. பெரியண்ணன் ஆவார். இவரின் மனைவி பெரி. விசாலாட்சி ஆவார். இவர்களின் இனிய புதல்வராக பெரி. சிவனடியான் 7.9.1929 ஆம் நாளில் பிறக்கின்றார்.

தனது ஊர் வீரசேகரபுரம் என்பதைப் பின்வரும் பாடலில் பதிவு செய்கிறார் கவிஞர் சிவனடியான்.

வீரசேகரபுரம் சித்திவிநாயகர்
விளங்குகின்ற என்றன் ஊரில்
விளையாடும் பருவத்தில் விநாயகர் பேராற்றல்
விவரங்கள் புரியவில்லை.

வீரசேகரபுரம் நகரத்தார் ஒன்றாகி
மீண்டுமுனைக் காணவந்தோம்

(பெரி. சிவனடியான், சக்தி விருத்தங்களும் சந்நிதி வெண்பாக்களும், ப. 9)

என்ற அகச்சான்றின் வழி இவர் பிறந்த ஊர் வீரசேகரபுரம் என்பதும் இவர் நகரத்தார் மரபின் ஒரு கிளை மரபில் வந்தவர் என்பதும் உறுதியாகின்றது.

பிறந்த முப்பதாம் நாளில் தன் தந்தையாரை இழக்கின்றார் பெரி.சிவனடியான்.

அன்புறு தந்தை அருள்மிகு பெரியண்ணன்
அவர்முகம் கண்ணால் அறிந்தவனில்லை
கருவில் கிடந்தவன் கண்டேன் உலகை
உலகை அடைந்த ஒன்றாம் மாதம்
என்னைப் பிரிந்து ஏகினார் இறையிடம்
என்னை அணைத்தே ஏங்கினார் அன்னை.

(அமரத்துவம் அடைந்த பெரி. விசாலாட்சி ஆச்சி முதலாண்டு நினைவு மலர், ப.31)

என்ற கவிதையில் தந்தை இழந்ததால் இவர் பெற்ற சோகமும், தாயார் தனை அனைத்து வளர்த்தால் ஏற்பட்ட பாதுகாப்பும் வெளிப்பட்டுள்ளது.

தந்தை இழந்த பிள்ளையைத் தாயார் போற்றிக் காத்தார். தன்னால் முடியாத நிலையில் தன் தங்கையின் வீடு சென்று குழந்தையும் தாயுமாக ஒருவர்க்கு ஒருவர் துணையாய் வாழ்ந்தனர்.

புதுவயலில் உள்ள ஸ்ரீசரசுவதி வித்யாசாலையில் இவரின் தொடக்கக்கல்வி ஆரம்பமானது. இப்பள்ளியில் ஐந்தாம் வகுப்புவரை இவர் படித்தார். நகரத்தார்கள் மூவரால் ஆரம்பிக்கப்பெற்ற இப்பள்ளி வளர்ச்சியுற்று நடைபெற்று வருகிறது.

இப்பள்ளியில் படித்த நிலையைப் பலஇடங்களில் கவிதைகளில் காட்டியுள்ளார் பெரி.சிவனடியான்.

இளைஞர் மூவர் ஏற்றிய விளக்கு
எண்ணெயாய் உழைப்பை ஏந்திய விளக்கு
கலைமகள் அறிவொளி காட்டிய விளக்கு
காற்றிலும் மழையிலும் கலங்கரை விளக்கு

புதுமைகள் பற்பல புகுத்திடும் சங்கம்
பூவுல கெல்லாம் போற்றிடும் சங்கம்
மதுரத் தமிழை வளர்த்திடும் சங்கம்
மதுரைக்கு அடுத்த மற்றொரு சங்கம்

தொடக்கக் கல்வியைத் துலக்கிட எழுந்தது
தொடர்ந்து வித்யா சாலையும் தந்தது
கடக்கக் கருதிய கல்வியை இளமையில்
கனிந்திடச் செய்து காத்தநற் சங்கம்

(பெரி. சிவனடியான் கவிதைகள், ப. 116)

என்று சரசுவதி சங்கத்தில் தான் படித்த இளமைக் கல்வியை நினைவு கூர்கிறார் கவிஞர்.

மற்றொரு இடத்தில் தான் இப்பள்ளிக்கு வந்த காட்சியை வளமாகப் பாடுகிறார் கவிஞர்.

என்கையில் கரும்பலகை ஏந்தி வந்தேன்
இப்பள்ளி சரசுவதிவித்யாசாலைக்கு
சின்னவனுக்கு ஓரிடத்தைச் சிறக்கத்தந்தாய்
செந்தமிழை எனக்கீந்து பேச வைத்தாய்
முன்னின்று பாடவைத்தாய், ஆட வைத்தாய்
முத்தமிழும் ஒருங்கமைய நடிக்க வைத்தாய்
என் நன்றி சொல்லிடுவேன் தாயே உன்னை
இதயத்தில் வைத்திடுவேன் இறுதி மட்டும்

(சிவனடியான் கவியரங்கக் கவிதைகள்,ப 78)

இவ்வாறு தான் தொடக்கக்கல்வி கற்ற பள்ளியை மறவாமல் நினைவு கூர்ந்து கவிதைகள் படைத்துள்ளாளர் பெரி.சிவனடியான்.

மேலும் இப்பள்ளியில் இவர் படித்த காலத்தில் அங்குப் பணியாற்றிய ஆசிரியர் திரு.ஜான் ஸ்டீபன் ஆவார். இவ்வாசிரியர் கவிதைகள் படைக்கும் ஆற்றல் மிக்கவர். மேலும் கவிதைகளை நயம்பட உரைக்கும் திறனாளர். இவர் கவிதைக் கதம்பம் என்ற கவிதை நூல் ஒன்றை ஜீவன் என்ற புனைப்பெயரில் அப்போது படைத்துக்கொண்டு இருந்தார். தான் படைத்த கவிதைகளில் சிலவற்றை அவர் ஐந்தாம் வகுப்பு படிக்கும் சிவனடியானிடம் இசைபடக் கூறுவது வழக்கம். இப்பாடல்கள் பெரி. சிவனடியான்

என்னும் சிறுபிள்ளையின் மனதில் கவிதையை நேசிக்க வைத்தது. கவிதை புனைய ஆர்வத்தைத் தந்தது.

அவர் படிக்கக் கேட்ட பாடல்களெல்லாம் எனக்கு மனப்பாடமாகின. அத்துடன் இத்தகைய பாடல்களை நாமும் எழுதவெண்டும் என்ற எண்ணமும் தோன்றியது. என்னுடைய பத்துவயதில் அவர் நட்ட கவிதை வித்து அது (பெரி. சிவனடியான் கவிதைகள், முகப்புரை. ப.2) என்று தனக்குக் கிடைத்த கவிதை அனுபவத்தை வெளியிடுகிறார் பெரி.சிவனடியான்.

ஆசிரியர் திரு ஜான் ஸ்டீபன் அவர்கள் தந்த கவிதை ஊற்று, பெரி.சிவனடியான் உள்ளத்தில் ஆறாக மாறி கவிதைக்கடலாக வளர வளர பெருகவைத்தது.

ஆசிரியர் திரு.ஜான் ஸ்டீபன் அவர்கள் கால வெள்ளத்தில் இறந்தபோது அவரின் கல்லறையில் வைக்க ஒரு கவிதையைப் படைத்தளித்தார் பெரி.சிவனடியான்.

முடிசூடா மன்னரென வாழ்ந்த ஆசான்
முத்தமிழில் கவிக்கதம்பம் தந்த ஜீவன்
குடியுயர அயராமல் உழைத்த சிங்கம்
கொண்டமனை மக்களுக்குக் கோடித் தங்கம்
கொடிகட்டிப் புகழ்தேக்கி வாழ்ந்த செம்மல்
குறையாத வளம் பலவும் பெற்ற செல்வன்
அடிதொழஇங் கமைந்திட்ட கல்லறைக்குள்
அமைதியுடன் ஜான்ஸ்டீபன் தெய்வமானார்

(பெரி. சிவனடியான் கவிதைகள்.ப.149)

திரு ஜான் ஸ்டீபன் ஏற்றிய கவிவிளக்கு பெரி. சிவனடியான் மனதில் ஒளிவீச அவர் மறைந்தாலும் அவரின் புகழால் நின்ற நிலவியது. கவிதையைக் கற்றுத் தந்த ஆசானுக்கு அமைதி கொள்ள பெரி. சிவனடியான் கவிதை தந்தார். இவர்கள் ஒருவருக்கு ஒருவர் ஆதி அந்தம் ஆனார்கள்.

புதுவயல் கவிஞரின் சொந்த ஊர் என்பதாக சற்றேறக் குறைய ஆகிவிட்டது. இவரின் நூல்களில் பெரி. சிவனடியான், புதுவயல் என்றே இவர் தன் பெயரை அமைத்துக்கொள்கிறார். ஆனால் இவர் தங்கி இருந்தது பெரும்பாலும் விழுப்புரம் போன்ற வெளியூர்களில்தான். எனவே இவர் தங்கல், விழுப்புரம் என்றே

அவ்வூர் பெயரைக் குறிப்பிடுகின்றார். இவ்வளவில் புதுவயல் கவிஞர் பெரி. சிவனடியான் என்றே கருதப் படத் தக்க அளவிற்கு இவரின் அடையானம் அமைந்தது.

தொடக்கக்கல்வி கற்றபின் அடுத்தநிலைக் கல்வியைக் கற்க இவர் புதுவயலுக்கு அருகில் உள்ள கண்டனூர் என்ற சிற்றூரில் உள்ள சிட்டாள் ஆச்சி உயர்நிலைப்பள்ளிக்குச் சென்றார். அப்பள்ளியில் திரு. மெ. திருநாவுக்கரசு, திரு. மு. பழனிவேல் ஆகியோர் தமிழாசிரியர்களாக இருந்தனர். இவர்கள் மாணவர்களிடம் தமிழ்ப்பற்றையும், தமிழ் உணர்வையும் ஊட்டி வளர்த்தனர். மேலும் இக்கல்வி நிறுவனத்தினை நடத்தி வந்த கொடைஞர் திரு வீ. தெ. வீரப்பர் தமிழார்வமும், கல்வி மேம்பாடும் கொண்டு அப்பள்ளியை நடத்தி வந்தார். இவர் பள்ளி நடத்திய திறத்தைப் பின்வரும் பாக்கள் காட்டுகின்றன.

இமயத்தின் எல்லைகண்ட எந்தமிழ் வாழ்க
சமயம் அறிந்தியக்கம் தந்தபள்ளி - மும்முரமாய்
வெல்க தமிழ் என்று வீறு கொண்டெழுந்தங்கே
வெல்வோம் தினமும் திரண்டு

அன்னை சிட்டாளாச்சி ஆன்ற கலைப்பள்ளிக்குச்
சென்று படித்துச் சிறப்புற்றேன் என்னைப்போல்
கோடான கோடிப் பேர் கூடிப் பயில்பள்ளி
வாடாமல் வாழ்கவென வாழ்த்து

(பெரி. சிவனடியான் கவிதைகள்,ப. 144)

இப்பள்ளியை நிர்வகித்து வரும் வீரப்பர் பற்றியும் பல நன்றிக்கவிதைகள் புனைந்துள்ளார் பெரி. சிவனடியான்.

தாய்பெயரில் பள்ளி தகவுடனே தந்த மகன்
ஓய்வின்றி ஈந்த உயர்வள்ளல்- தூய்மையுடன்
வாழ்வில் வளம்பெருக வாழ்த்தநல் வீரப்பர்
தாள்பணிவோம் என்றும் தழைத்து

(பெரி . சிவனடியான் கவிதைகள். ப.144)

இவ்வாறு தான் கற்ற கல்விக் கூடத்தை நினைவு கூரும் இவர் தனக்குக் கவிதை எழுதச் சீர்மை படுத்திய இரு தமிழாசிரியர்களையும் பாராட்டிக் கவிதை படைத்துள்ளார்.

ஆசிரியர் மெ. திருநாவுக்கரசு அவர்களை யாரும் ஆசிரியர் என்றோ ஐயா என்றோ அழைப்பதில்லை. அவர் மாணவர்களால் அண்ணன் என்றே அழைக்கப்பெற்றார். அவரின் இயல்புகளைப் பின்வரும் கவிதை பாடுகின்றது.

திருநாவுக்கரசு என்றால் செட்டிநாட்டில்
தெரியாத ஆளில்லை தெரிந்தாலே
விரும்பி வந்து கல்வி பயில மாணவர்கள்
வெகுவிரைவாய்ச் சேர்ந்தார்கள் கண்டனூரில்
வருகின்ற மாணவர்கள் ஐயா என்று
வழக்கம்போல் அழைக்காமல் அண்ணன் என்றார்
பெருகியது கல்வியுடன் தமிழும் அங்கே
பெற்றியதால் தமிழ் கற்க விழைந்தேன் நானும்

(பெரி. சிவனடியான் கவிதைகள்.ப. 145)

என்று அண்ணன் திருநாவுக்கரசின் திறம் பாராட்டப் பெறுகிறது.

பயன் விழையாப் பழனிவேல் என்ற தலைப்பில் மற்றொரு தமிழாசிரியர் திரு. பழனிவேல் அவர்கள் பணி சிறப்பிக்கப்படுகிறது.

இத்தகைய பெரும்புலவர் பழனிவேலர்

என்னுள்ளத் தமிழுணர்வை வெளிக்கொணர்ந்தார்
சத்தியமாய் அவரின்றி நான் பயின்ற
தமிழுண்டா? கல்வியுண்டா? நூல்கள் உண்டா?
புத்தி பல சொன்னதல்லால் தமிழைக்கற்கப்
பொருளதவி பெறுவதற்கும் வழிகள் சொன்னார்
பத்தியமாய் அவர் நோயால் வாழ்ந்த காலம்
பாசமுடன் என் வீட்டில் தங்க வந்தார்

(பெரி. சிவனடியான் கவிதைகள்,ப.147)

உடல் நலிவால் வாடியபோது தன் இல்லத்திற்கு பழனிவேல் ஆசிரியரை அழைத்துவந்த மனிதநேய மாணவர் பெரி. சிவனடியான் ஆவார்.

இவ்வாறு இவர் தன் இளமைப் பருவத்திலேயே கவிதையின்பால் ஈடுபாடு கொண்டு கவிதைகள் கற்பது எழுதுவது கேட்பது என்று தன்னை வழக்கப்படுத்தி'க்கொண்டார். . இவரே

கவிதைகள் எழுதவும் தொடங்கினார். இவருடன் இணைந்த நண்பர்களும் படைப்பார்வத்துடன் விளங்கினர். கண்டனூர் தேனப்பன், பழனியப்பா சுப்பிரமணியன், வை. இராமநாதன் ஆகியோர் இவரின் இனிய நண்பர்களாக விளங்கினர். அவர்கள் இவரின் படைப்புணர்விற்கு உதவிகள் பல செய்தனர்.

இந்நண்பர்களுடன் நீண்ட கால நட்பி`னைப் பெரி.சிவனடியான் வைத்துள்ளார். இந்நண்பர்கள் பெரி.சிவனடியான் நூல்களுக்கு முன்னுரை எழுதி உள்ளனர்.

இவர் நண்பர்களில் ஒருவரான தேனப்பன் அவர்களின் கருத்துரை பின்வருமாறு. கண்டனூர் சிட்டாளாச்சி உயர்நிலைப்பள்ளி, காரைக்குடி அழகப்பர் கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகிய கல்விக் கோயில்களில் சிந்தனைக் கவிஞர் சிவனடியார் அவர்களுடன் சமகாலத்தில் பயிலும் பெருவாய்ப்பு பெற்றவன் நான். அடியார், கவிதை புனைதல், கட்டுரை வரைதல், நாடகம் எழுதுதல், மேடையில் பேசுதல் என்று பள்ளிப் பருவத்தில் தன் ஆற்றலைப் பல்வேறு துறைகளிலும் வெளிப்படுத்தி, பயில்வித்தோரையும் உடன் பயின்றோரையும் வியப்பில் ஆழ்த்தியவர். என்றாலும் அவர் தன்னை மறந்து ஈடுபட்டது கவிதை எழுதுவதில்தான். பிள்ளைப் பிராயத்திலேயே கவிதை எழுதுவது அவருக்குக் கைவந்த் கலையாயிற்று(பெரி.சிவனடியான், கனிக்குவியல், முன்னுரை.ப.1) என்ற இவரின் கருத்துரை நட்புப் பெருக்கால் வரையப்பெற்றதாகும்.

சிவனடியான் அவர்களை அடியார் என்று விளிக்கும் முறை நண்பர்களிடம் இருந்துள்ளது என்பதை மேற்பகுதியின் அழைப்பு முறை தெரிவிக்கின்றது. நண்பர்களால் அடியார் என்றழைக்கும் நிலையில் மதிப்பும், பணிவும், பாசமும் அன்பும் கொண்டு விளங்கியவர் சிவனடியான். மேலும் அடியாருக்குக் கவிதை படைப்பதில் மற்ற துறைகளைக் காட்டிலும் ஆர்வம் அதிகம் என்பதை நண்பர்களும் அறிந்து வைத்திருந்தனர் என்பதை மேற்பகுதி காட்டுகின்றது. .

இவருடன் பயின்ற மற்றொரு நண்பர் தமிழ்த்தொண்டர் லெ. இராமநாதன் ஆவார். இவர் பெரி. சிவனடியான் கவிதைகளை

மனனம் செய்து அவருக்கே சொல்லும் ஆற்றல் பெற்றவர். இவரைப்பற்றித் தன் கவிதையில் பதிவு செய்துள்ளார் பெரி. சிவனடியான்.

சிட்டாளாச்சி சீர்மிகு பள்ளியில்
சிறுவயதினராய்ச் சேர்ந்து படித்தோம்
தமிழுணர்வாலே தகைத்தது நட்பு
அவருள வரையிலும் அகலாதிருந்தது
நானுள வரையிலும் நட்பது நிலைக்கும்
தொண்டர் என்ற சொல்லின் பொருளை
வாழ்ந்து காட்டி மறைந்தவர் நண்பர்
இளவயதில் நான் எழுதிய பாடல்கள்
அத்தனையும் அவர் அகத்தில் இருந்தன

(பெரி. சிவனடியான் கவிதைகள்,ப.148)

என்ற பாடலில் தமிழ்த்தொண்டராக விளங்கிற தன் நண்பர் பற்றிய மதிப்பீட்டைத் தருகிறார் கவிஞர் சிவனடியான். தமிழ்த்தொண்டர் இறந்த செய்தி கேட்டு எழுதிய கவிதை இதுவாகும்.

இவ்வாறு நண்பர்களும், ஆசிரியர்களும் தக்க துணையாக அமைய இவர் கவிஞராக வெளிப்பட்டார் . இவரின் முதல் கவிதை அச்சுவடிவம் ஆனது குமரன் என்ற இதழில் ஆகும். அமராவதி புதூர் என்ற ஊரில் இருந்து அப்போது குமரன் இதழ் வெளிவந்து கொண்டிருந்தது. அந்த இதழில் வெண்பாவுக்கான ஈற்றடி தரப்பெற்று போட்டி நடத்தப்பெறும். அதற்குக் கவிஞர்கள் பாடல் புனைந்து அனுப்ப வேண்டும். அவ்வகையில் இளவயதினரான சிவனடியானும் இவ்வாய்ப்பில் கலந்து கொண்டு தன் முதல் கவிதையை எழுதினார்.

கம்பன் கவியே கவி என்ற ஈற்றடிக்கு கவிஞர் பெரி. சிவனடியான் எழுதிய கவிதை பின்வருமாறு.

கற்றவரும் மற்றவரும் கண்டு உளமகிழ
வற்றாப் பொருளெதுசொல்! மன்பதையில் குற்றமிலாத்
துங்கத் தமிழொருங்கே தூய்மை புனைந்ததிருக்
கம்பன் கவியே கவி

(பெரி. சிவனடியான் கவிதைகள்,ப. 89)

இக்கவிதையில் கம்பன் என்னும் கவிச்சக்கரவர்த்தியின் புகழைப் பாடியுள்ளார் கவிஞர் பெரி. சிவனடியான். முதல் கவிதையே கம்பனைப் பற்றியது என்பது கவனிக்கத்தக்கது. அதுவும் மிக இளவயதில் கம்பனையும், தமிழையும், வெண்பாவையும் அறிந்து வைத்துள்ள இவரின் திறம் வியப்பிற்குரியது.

தன் கவிதையை வெளியிட்ட குமரன் இதழின் ஆசிரியர் திரு. சொ. முருகப்பா அவர்களையும் ஒரு கவிதையில் இவர் நினைவு கூர்ந்துள்ளார்.

கலப்பு மணம் விதவை மணம் தேவை என்று
காலத்தை வெறும் பேச்சில் கழித்த நாளில்
உலகறிய மரகதத்தைக் கைப்பிடித்தே
உரத்தோடு வலம் வந்த உறுதியாளன்
பலர்விரும்பும் பணம்பொருளுக் கிரையாகாமல்
பைந்தமிழில் குமரன் இதழ் படைத்த ஆசான்
நிலவுலகில் கல்விக்கு மகளிர் இல்லம்
நிலைத்திருக்கச் செய்த முருகப்பா வாழ்க

(பெரி. சிவனடியான் கவிதைகள். ப. 139)

என்ற இக்கவிதை சொ. முருகப்பா அவர்களை அறிமுகம் செய்கின்றது. அக்காலத்தில் எழுச்சி மிக்கப் பேச்சாளராக, சீர்திருத்தவாதியாக விளங்கியவர் சொ. முருகப்பா ஆவார். இவர் மேடைப் பேச்சில் ஒருமுறை பேசிக்கொண்டு இருக்கும்போது, விதவை மணத்தை ஆதரித்துப் பேசிக்கொண்டிருந்தார். அப்போது மரகதவல்லி என்ற அம்மையார், எழுந்து தான் ஒரு விதவை, தன்னைத் தாங்கள் திருமணம் செய்து கொள்வீர்களா என்று கேட்க அதற்கு உடன் இசைந்தார் சொ. முருகப்பா. மேலும் இவர் மகளிர் முன்னேற்றத்திற்காக இல்லம் ஒன்றைத் தொடங்கிக் கல்விச் சேவையாற்றினார். அவர் நடத்திய இலக்கிய ஏடு குமரன் என்ற பத்திரிக்கையாகும். இப்பத்திரிக்கையில் பெரி. சிவனடியான் கவிதை இடம்பெற்றதைத் தொடர்ந்து அவருக்கு நன்றி செலுத்தும் வகையில் இக்கவிதையைப் படைத்துள்ளார் கவிஞர் பெரி.சிவனடியான்.

அடுத்து இவரின் நண்பரான தேனப்பன் ஒரு கையெழுத்து ஏடு ஒன்றை எழில் என்ற பெயரில் நடத்தி வந்தார். அதில் இவரின் மற்றொரு கவிதை இடம்பெற்றது.

போற்றித் தமிழின் புகழ்காக்க எண்ணுங்கால்
தூற்றி அதனைத் தொலைக்கின்ற மாற்றாரை
வென்று புகழ்கொண்டு மேதினியிற் செந்தமிழை
என்றும் வளர்க்கும் எழில்

(பெரி. சிவனடியான் கவிதைகள்,ப.89)

இக்கவிதை எழில் என்ற கையெழுத்து இதழை வாழ்த்துவதாக அமைந்துள்ளது. என்றாலும் இம்மாணவ நண்பர் குழுவினர் தமிழ் உணர்வு மிக்கவர்களாக இருந்தனர் என்பதற்கு இக்கவிதையும் சான்று. இவ்விதழும் சான்று.

இவ்வாறு பள்ளிப் படிப்பு கவிதை புனையும் வல்லமையைக் கவிஞர் பெரி. சிவனடியானுக்கு வழங்கியது. இதன் பின்னர் உயர்கல்வி கற்க அதாவது அக்கால இன்டர் என்ற இடைநிலை வகுப்புக் கல்வியைப் பெற இவர் காரைக்குடி அழகப்பா கல்லூரிக்கு வந்தார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தெட்டாம் ஆண்டளவில் இவர் இங்குக் கல்வி கற்கத்தொடங்கினார்.

வள்ளல் அழகப்பர் தோற்றுவித்தக் கல்விக்கூடம் அழகப்பா கலைக் கல்லூரியாகும். அக்காலத்தில் இது மாணவர்களின் உயர்கல்விக்கான ஒரே சரணாயலயமாகத் திகழ்ந்தது. இதனை ஏற்படுத்திய வள்ளல் அழகப்பரை இவர் பெருமையோடு நினைவுகூர்கிறார்.

ஆலயங்கள் கட்டுவதும் அவற்றின் முன்னர்
அருங்குளங்கள் வெட்டுவதும் அறவழிக்குப்
பாலமென நினைத்திருந்த செட்டி நாட்டைப்
பாரறியச் செய்தவனே அழகன் வள்ளல்
கோலமிகு திருப்பணிகள் போதும்அங்கே
குடியிருக்கும் கடவுளரும் போதும் என்று
காலத்தை உணர்ந்தவனாய்க் கருத்தில் கொண்டு
காரைநகர் கலைக்கழகம் அமைத்துத் தந்தான்

(பெரி. சிவனடியான் கவிதைகள்,ப.120)

என்று வள்ளல் அழகப்பரையும் நன்றியுடன் நினைவு கொள்கின்றார் கவிஞர் பெரி. சிவனடியான்.

காரைக்குடி அழகப்பா கலைக்கல்லூரியில் படித்த காலத்தில் இவர் புதுக்கோட்டையில் இருந்து வெளிவரும் பொன்னி என்ற இதழில் எழுதத்தொடங்கினார். அவ்விதழில் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் என்ற பகுப்பு இருந்தது. அப்பகுப்பில் இவர் இணைந்து கொள்ள இவரின் கவிதை உதவியது. மாற்றம் தேவை என்ற தலைப்பில் இவர் எழுதிய கவிதை பாரதிதாசன் பரம்பரைக் கவிதையாக வெளிவந்தது.

வெல்லமெனும் தமிழழிக்க முயல்வார் வாழ்வில்
வேர்வையினை நீராக்கும் உழவர் வாழ்வில்
பல்லக்கில் இருந்து உண்ணும் பரமன் பக்தர்
பஞ்சணையில் மதுவோடு பழகும் வாழ்வில்
கல்லறைக்குள் சென்ற மொழி திருமணத்தில்
கடவுளர் முன் காதில்விழக் கதறும் வாழ்வில்
எல்லாமே துன்பமதாய்ச் சேர்ந்திருக்கும்
எந்தமிழர் வழ்வினிலே மாற்றந்தேவை

(பெரி. சிவனடியான் கவிதைகள், ப.91)

என்ற கவிதையில் இவரின் பகுத்தறிவுச் சிந்தனை, தமிழ் மக்கள் மறுமலர்ச்சிச் சிந்தனை வெளிப்படுகிறது. இதன் காரணமாக இவர் கவிதை உலகில் சிந்தனைக் கவிஞராக அறியப்பெற்றார்.

தொடர்ந்து பொன்னி இதழ் பெரி. சிவனடியான் அவர்களுக்குத் தக்க இடத்தைத் தந்து அவரின் பெருவாரியான கவிதைகளை வெளியிட்டு வந்தது. பொன்னி இதழின் ஆசிரியர்களான அரு. பெரியண்ணனும், முருகு சுப்பிரமணியனும் கவிஞர் பெரி. சிவனடியானால் கவிதையொன்றில் நினைவு கூரப்பெற்றுள்ளனர்.

பொன்னி இதழ் வெளியீட்டில் எழுதச்செய்து
புகழாரம் பெறவைத்த பொன்மனத்தோய்
கன்னியெழுத் தெனக்களித்துக் களித்த மேலோய்
கண்டுள்ளீர் மணிவிழா அறுபதாண்டும்
நன்மக்கள் குலம் சுற்றம் நனிசிறக்க

நாயகமாய் மீனாட்சியோடு வாழ்ந்தாய்
என்னிதயம் குடிகொண்ட பெரிய அண்ணன்
என்றென்றும் விலகாமல் என்னுள் வைத்தேன்

பாவேந்தர் பரம்பரையில் பாட வைத்தாய்
படம்போட்டு மலரினிலே பதியச்செய்தாய்
நாவேந்தி நற்றமிழர் மகிழும் வண்ணம்
நானெழுதும் பாடல்களை மாதந்தோறும்
பூவேந்தும் பொலிவேந்தும் பொன்னி ஏட்டில்
புகழ் முருகு சுப்பிரமணியம் போடச் செய்தாய்
சாவேந்தும் வரையினிலும் மறக்கமாட்டேன்
தமிழ்ப்பாடல் யாப்பதையும் துறக்கமாட்டேன்

(பெரி. சிவனடியான் கவிதைகள்.ப.139)

என்ற இப்பாடலில் இருவரின் துணைமைச் செயல்கள் பாராட்டப்பெற்றுள்ளன. மேலும் தமிழ்ப்பாடல் யாப்பினை மறவாமால் உயிர்போகும் வரை இருப்பேன் என்ற உறுதி இக்கவிஞர் உள்ளத்தில் இருந்துள்ளது என்பதும் அறியத்தக்கது. அதன்படியே அவர் வாழ்க்கையும் அமைந்தது.

இவ்வாறு கவிப்பயிரை ஊட்டமுடன் பெரி. சிவனடியான் வளர்த்தார். இவருடன் இனிய நண்பர்களாக அக்காலத்தில் விளங்கியவர்கள் மு. அண்ணாமலை, நாக. முத்தையா, நாரா.நாச்சியப்பன் ஆகியோர் ஆவர் இவருக்குக் காரைக்குடியில் கவிஞர் முடியரசன், அறிஞர் தமிழண்ணல் ஆகியோரின் வழிகாட்டல்களும் உதவின.

இன்டர் என்ற கல்வி முடித்தபின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் படிக்க நகர்ந்தார் பெரி. சிவனடியான். தமிழில் இளநிலைப் படிப்பினை அங்குப் படித்தார்.

நல்லதமிழ்ச் சமுதாயம் நனிசிறக்க வேண்டுமென
வல்லார்அண்ணாமலையார் வகுத்த கலைக்கழகம்
சொந்தப் பணத்தில் தொடர முடியாத நிலையில்
அந்தத் தமிழ்விரும்பி அங்குபோய் நான் கற்றேன்
அந்தத் தமிழ்தான் அரங்கில் நான் பாடுவது
எந்தத் தமிழிதற்கு இணையாகும் இவ்வுலகில்

(பெரி. சிவனடியான் கவிதைகள்,ப. 119)

என்ற பாடலின்வழி தான் படித்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு நன்றி செலுத்துகிறார் கவிஞர் பெரி.சிவனடியான்.

பல்கலைக் கழகத்தில் படித்தபோதும் இவர் தன் கவிதைப் பயணத்தைத் தொடர்ந்தார். தொடர்ந்து பொன்னி இதழில் எழுதினார். அவ்விதழ்க் கவிதைகள் வழியாக இவருக்கென்று தனித்த அடையாளம் கிடைத்தது.

இக்காலத்தில் இவர் எழுதிய நாடகம் அவளுக்காக என்பதாகும். இந்நாடகத்தை இவர் எழுதியது மட்டுமில்லாமல் பல்வேறு இடங்களில் இதனை இவர் அரங்கேறச் செய்தார். முதலாவதாக 14.5.1951 ஆம் நாளன்று புதுவயல் ஸ்ரீசரஸ்வதி சங்க நாடகக் குழுவினரால் காதல் இதழ் ஆசிரியர் திரு. அரு. இராமநாதன் அவர்களின் தலைமையில் இந்நாடகம் அரங்கேற்றம் செய்யப்பெற்றது.

மேலும் இந்நாடகம் புதுக்கோட்டை, கறம்பக்குடி, ஆரகளூர், அண்ணாமலை நகர், சேலியமேடு, தேவகோட்டை, மதுரை, புங்கமுத்தூர், கல்லூரணி, கல்கத்தா, மதுரை, மலேசியா, மாயவரம், செக்கானூரணி, முறையூர், கோவிலூர், பம்பாய், குழிபிறை, விசுவநாதபுரம், செட்டிநாடு, ஆடுதுறை, அந்தியூர், கொழும்பு, பாபநாசம், கும்பகோணம், பம்பாய், நெடுமறம், இராமச்சந்திரபுரம், பள்ளத்தூர், கொட்டாம்பட்டி போன்ற பல ஊர்களில் அரங்கேற்றம் செய்யப்பெற்றது.

நாடக அரங்கேற்றம் என்பது இவரின் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவநிலை முதல் இவர் அரசுபள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய நிலை வரை தொடர்ந்தது. இவர் சென்ற பள்ளிகளில் எல்லாம் இந்நாடகம் இவர் தயாரிப்பில் வெளியானது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் படித்த பிறகு தனக்கான வேலையைப் பெற அவர் பெரிதும் சிரமப்பட்டார். ஒருவழியாக அரசு பள்ளியில் ஆசிரியர் பணி கிடைத்தது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தைந்தாம் ஆண்டில் அவர் பொள்ளாச்சியைச் சார்ந்த எரிசினம்பட்டி என்ற ஊரில் அமைந்திருந்த காந்தி கலா நிலைய உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியில் சேர்ந்தார்.

இப்பள்ளியின் சிறப்புகள் பற்றியும், பள்ளி நிர்வாகத்தினர் சிறப்புகள் பற்றியும் எடுத்துரைக்கும் வில்லுப்பாட்டு ஒன்றை இவர் எழுதி மாணவர்கள் வாயிலாக அதனை நடத்திக்காட்டினார். இவ்வில்லுப்பாட்டு அச்சுவடிவமாகவும் வெளிவந்தது என்பது குறிக்கத்தக்கது.

கல்வி பெருகவும் கலை வளரவும்
கருதிடுதெங்கள் பள்ளி- நாளும்
கருதிடுதெங்கள் பள்ளி
செல்வத் திருத்தமிழ் செம்மை துலங்கிடச்
சேவை செய்கின்ற தெம்பள்ளி- நாளும்
சேவை செய்கின்ற தெம்பள்ளி
இயலும் இசையும் நாடகமும்
ஏற்று நடத்தும் பள்ளி நாளும்
ஏற்று நடத்தும் பள்ளி

(பெரி. சிவனடியான், காந்தி கலாநிலைய உயர்நிலைப்பள்ளி வரலாறு, வில்லுப்பாட்டு,ப. 11)

என்று மாணவர்கள் விரும்பும் சந்தத்தில் இவ்வில்லுப்பாட்டு பாடப்பெற்றுள்ளது. இடையிடையே உரைநடைப் பகுதிகள் கலந்து, கலந்துரையாடல் இணைத்து இதனைச் செம்மைபடச் செய்துள்ளார் கவிஞர் பெரி. சிவனடியான்.

இப்பள்ளியின் கண்காணிப்பாளர் திரு பழனியப்பா பிள்ளை, தலைமை ஆசிரியர். பி. பாலசுப்பிரமணியம், பள்ளியின் தலைவர் ஸ்ரீரங்கக்கவுண்டர் ஆகியோர் இந்நூலில் நன்றியுடன் நினைவு கூரப்பெற்றுள்ளனர்.

இப்பள்ளியின் ஆண்டுவிழாவில் அவளுக்காக நாடகம் அரங்கேற்றம் செய்யப்பெற்றது. இதனை நாடக ஆசிரியர் பெரி. சிவனடியான் அவர்களே இயக்கி இந்நாடகத்தை நடத்தினார். நாடகத்தைக் கண்ட மக்கள் பள்ளியை, ஆசிரியரைப் பாராட்டினர்.

ஆனால் பத்துநாள்களில் இவருக்கு ஒரு நெருக்கடி வந்தது. ஆசிரியர் சிவனடியான் வேறு பள்ளிக்கு மாற்றப்பட உள்ளார் என்ற தகவல் பரவியது. இதற்குக் காரணம் நடத்தப்பட்ட நாடகத்தில் வரும் ஒற்றைவரி வசனம்தான். பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டு பற்றி ஒரு விமர்சனம் அந்நாடகத்தில்

இடம்பெற்றிருந்தது. அந்த விமர்சனம் அவ்வூர் பஞ்சாயத்து தலைவரை காயப்படுத்தியதால் இந்த இடமாறுதல் வருவிக்கப்பெற்றது.

இக்காலத்தில் கவிஞருக்குத் திருமணம் ஆகியிருந்தது. 8-6.1958 ஆம் நாளில் திருமதி செல்வமணி அவர்கள் இவரின் இல்லறத்தின் துணையாக அமைந்தார். இவர்களுடன் இவரின் தாயரும் உடன் உறைந்தார். குடும்பத்துடன் பணிமாறுதல் பெற்ற ஊருக்குச் செல்ல இவர் ஆயத்தமானார்.

இந்நேரத்தில் இவரை மீளவும் காந்தி கலா நிலைய உயர்நிலைப்பள்ளியிலேயே இருக்கச் செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பெற்றன. இருப்பினும் அம்முடிவு தோல்வியில் முடிய இவர் அப்படி வந்தாலும் இனி இந்த ஊரில் இருப்பதில்லை என்று முடிவெடுத்துக் கிளம்பினார்.

இடையில் ஒரு சோதிடர் ஒருவரின் வழிகாட்டுச் சொற்களால் ஆறுதல் அடைந்த இவரும், இவரின் மனைவியாரும், இவரின் தாயாரும் மாறுதலான ஊருக்குச் செல்வதே நல்லது எனக் கருதி அங்குச் சென்றனர். ஒரு சில மாதங்களில் இவரின் மனைவி கருவுற்றார். புதிய இடம் புதிய மறுமலர்ச்சியைத் தந்தது.

மகப்பேறு வாய்த்து ஒன்பது மாதங்கள் கடந்த நிலையில் மனைவியை ஊருக்கு அனுப்பிவைக்க முடிவெடுத்தார் பெரி. சிவனடியான். அதற்காக மருத்துவப் பரிசோதனைக்கு மதுரைக்குத் தன் மனைவியை அழைத்துச் சென்றார். மருத்துவமனையில் இவரின் மனைவியைப் பரிசோதித்த மருத்துவர் மகப்பெறு சற்று சிக்கலாக இருக்கும் என்பதால் மிகக் கவனமுடன் வசதிகள் வாய்ந்த நல்ல மருத்துவமனையில் மகப்பேற்றுக்குச் சேர்க்கக் கொல்லி அறிவுரை தரப்பெற்றது. இதன் காரணமாக கூடுதல் மருத்துவ கவனம் தர, வேண்டிய நிலையில் அரசு அனுமதியைப் பெற, கவிஞர் மாவட்ட கல்வி அதிகாரியைச் சந்திக்கச் சென்றார். அப்போது அங்கும் அவருக்கு ஒரு நெருக்கடி காத்திருந்தது.

அனுமதி பெறச் சென்றவரிடம் அவரின் பணிமாறுதல் ஆணை மீளவும் வழங்கப்பெற்றது. ஒட்டன் சத்திரம், அரசு உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக அவர் பணிமாறுதலுக்கு

உள்ளாக்கப்பெற்றிருந்தார். இதற்கு எந்தக் காரணமும் இல்லை. பெரிய பள்ளிக்குத் தமிழாசிரியர் தேவை என்ற நிலையில் இப்பணிமாறுதல் ஏற்படுத்தப்பெற்றிருந்தது.

கவலையோடு இல்லம் வந்து சேர்ந்த அவர், தன் மனைவி, தன் தாயார் , கருவில் உள்ள குழந்தை மூவரையும் சொந்த ஊர் நோக்கி அனுப்பினார். வழிச்செலவிற்கு மட்டுமே அவர்களுக்குப் பணம் தரும் அளவில் அவரின் கையிருப்பு அன்று இருந்தது.

அவர்கள் சென்றபின் அவர்களின் நினைவாகவே, இருந்த அவர் பணிமாறுதல் பெற்ற இடமான ஒட்டன்சத்திரத்திற்கு மாட்டுவண்டியில் தன் குடும்பப் பொருள்களை எடுத்துக்கொண்டுச் சென்றார்.

இடையில் இவரின் மனைவியார் தன் தாய் ஊருக்கு மகப்பேற்றிற்காக சென்றார். மனைவியின் தாய் ஊர் மிகப் பின்தங்கிய கிராமம் என்பதால் மருத்துவ வசதி எப்படி கிடைக்குமோ என்று இவர் கவலைப் பட்டார்.

அப்போது பழனிமலைக்குச் செல்லும் ஒரு நல் வாய்ப்பினை இவர் பெற்றார். கவலைகள் தீர பழனி மலை ஆண்டவனை நம்பி மலைஏறினார். முருகனை மனமுருக வேண்டினார். அப்போதும் இவர் உள்ளத்தில் பாடல் பிறந்தது.

பழனி மலையானைப் பாடிப் படியேறி
உழலும் துயர் போக்க உருகித் தினம் நடந்தேன்
சிக்கலிலே பாடிச் சிக்கல் தவிர்ந்திட்டேன்
பக்கமுள்ள விராலிமலை பாடிக் களித்திட்டேன்
திருமயிலை சிங்காரா தினமுன்னைப் பாடுகிறேன்
ஒரு மயிலை விட்டிறங்கி ஓடிவந்தால் ஆகாதா
இருமயிலை விட்டுவர இல்லை மனமுனக்கு
பொறுமையிலை என்றனுக்குப் புறப்பட்டு வாதோழா

(பெரி. சிவனடியான், முயல்வது மதி முடிப்பது விதி, ப. 37)

என்று பழனி முருகனிடம் தன் குறை தீரப் பாடுகிறார். ஒரு மயில் முருகன் ஏறும் மயில். இருமயில் வள்ளி தெய்வானை என்ற இரு தேவியல். பொறுமையில் என்பது பொறுமையில்லை என்பதைக் குறிப்பது. இவ்வாறு சொல்விளையாட்டு கொண்டுக் கவிதை படைப்பது இவரின் தனித்த சிறப்பு.

பழனி மலை முருகனைப் பாடி வணங்கி அதன்பின் மிகச்சரியாக ஒன்பது மணிக்கு ஒட்டன் சத்திரம் பள்ளிக்கு வந்துப் பணியில் அமர்ந்தார். அப்போது அவருக்கு வந்த ஒரு தந்திச் செய்தி மகிழ்வைத் தந்தது. தனக்கு மகன் சுகமாகப் பிறந்தான் என்ற செய்தியே அந்தத் தந்தி கொண்டுவந்த செய்தி. கடவுளை வணங்காத தன்மை கொண்டிருந்த சிவனடியார் சிவனாண்டி மகனாண்டியின் அருளைப் பெற்று மகனைப் பெற்ற அனுபவம் இதுவாகும்.

இதன் பின் ஒன்பதாண்டுகள் ஒட்டன் சத்திரம் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். இக்காலத்தில் இவர் தமிழில் முதுகலைப் படிப்பினைச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் வழியாகப் படித்து வைத்திருந்தார். இந்நிலையில் அரசு பள்ளி தமிழாசிரியர்கள் அரசு கல்லூரி விரிவுரையாளர்களாக பணிமேன்மை பெறலாம் என்ற வாய்ப்பப வழங்கப்பெற்றது. இந்நிலையில் இவர் அப்பணிக்குச் செல்ல முயன்றார். இதன் விளைவாக விழுப்புரம் அரசு கல்லூரியின் பேராசிரியராக இவர் அமர்ந்தார்.

எனினும் பேராசிரியர்க்கு உரிய பணப்பயன் இவருக்குக் கிடைக்கவில்லை. அரசு பள்ளி ஆசிரியர் சம்பள விகிதமே இவருக்கு வழங்கப்பெற்றது. மேலும் ஆண்டுதோறும் தரப்படும் பள்ளிக் கல்விப் பணிக்கான ஊக்கத்தொகையும் நிறுத்தப்பட்டது. மேலும் இவருக்கு பல்கலைக்கழக மானியக்குழுவின் வருமான விகிதமும் வழங்கப்பட பல முட்டுக்கட்டைகள் எழுந்தன. இதன் காரணமாக மிக சொர்ப்ப சம்பளத்தில் இவர் அரசு கல்லூரியில் பணியாற்றினார்.

இந்நிலையை இப்படி இரண்டு இலக்கச் சம்பளத்தில், பள்ளியில் பணியாற்றத் தொடங்கி,,மூன்றிலக்க ஓய்வூதியத்தோடு பணி ஓய்வு பெற்றேன். பெற்ற தொகைகளை இப்படிச் சொல்வதே பெருமை (பெரி. சிவனடியான், முயல்வது மதி முடிப்பது விதி. ப. 39) என்று தன்னிலையை ஊழின் விளையாட்டாகக் கொள்கிறார் கவிஞர்.

இவருக்குப் பெரியணன் என்ற மகனும், விசாலாட்சி, தெய்வானை என்ற மகள்களும் பிறந்தனர். இவரின் துணைவியார் வாழ்ந்து வருகிறார்.

இவரின் தாயார் பெரி. விசாலாட்சி ஆச்சி 14.7.86 தன் எண்பதாவது வயதில் அமரத்துவம் பெற்றார். அப்போது இவர் பாடிய இரங்கற்பா ஒவ்வொரு மகனும் தாய்க்குத் தரும் இரங்கற்பாவாக, அவலச்சுவையுடன் விளங்குகின்றது.

பிணமெனத் தாயைப்போட்டுப்
　　பிணமொன்றைத் தூக்கிச் சென்றார்
கணவனை இழந்ததென் தாயோ
　　காலமும் தீயில் வெந்தாள்
உணவி'னைத் துறந்தாள் ஈசன்
　　ஒருவனே கதியென்றெண்ணிக்
கணம்கணம் என்னைநம்பிக்
　　கண்ணிற்குள் வைத்துக் காத்தாள்.

முந்தியில் கிடத்தி என்னை
　　மூச்சி'னைக் ஈந்து காத்தாள்
சொந்தமாய் இருந்ததெல்லாம்
　　தொடர்ந்து விற்று எனை வளர்த்தாள்
சிந்திய கண்ணீர் முத்தால்
　　சேய் எனைப் படிக்க வைத்தாள்
அந்தியில் என்னை நோக்கி
　　அவள் வாசற்படியில் நிற்பாள்

(அமரத்துவம் அடைந்த பெரி. விசாலாட்சி ஆச்சி முதலாண்டு நினைவ மலர், ப. 1)

இவ்வாறு தாயன்பு மிக்க சேயாக விளங்கினார் பெரி. சிவனடியான்.

இவர் வாழ்வில் இவரை இருமுறை நோய் வந்து தாக்கிற்று. முதன்முறை புதுக்கோட்டை மருத்துவர் வி.கே. என் ராமச்சந்திரன் துணைநின்று இவரைக் காத்தார். உடல்நலம் பெற்றார். மறுமுறை தீராத நோய்வந்துத் தாக்கிற்று. அதனை பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனை சென்று அங்குச் சிகிச்சை பெற்றுத் தீர்த்தார்.

உடல் நலிவும் உள்ளச் சோர்வும் போக்க பின்னாளில் இவர் மேல்மருவத்தூர் சக்தியின் தாசனாக ஆனார். தன்னை மேல்மருவத்தூர் ஆதிபராசக்தியின் தொண்டராக ஆக்கிக் கொண்டார். சிவப்பாடை கட்டி கவியாடை புனைந்து

அம்பிகைக்குச் சாத்தினார். நவராத்திரி விழாக்களில் மேல்மருவத்தூரில் இவர் கவியரங்கேறினார்.

வயது முதிர்வாலும், உள்ளச் சோர்வாலும் இவர் அன்று இயற்கை எய்தினார். .

வாழும் வரை போராடி, செல்வத்தின் சுவையை சிறிதும் உணராது, கவிச்சுவையையும் விட்டுவிடாது வாழ்ந்த இனியச் சந்தக்கவிஞர் பெரி.சிவனடியான் ஆவார்.

இவரின் முன்னோடிகள்

இவர் வள்ளுவர், கம்பர், பாரதியார், பாரதிதசான், கண்ணதாசன் ஆகியோரைத் தன் முன்னோடிகளாகக் கொண்டு வாழ்ந்தார்.

வள்ளுவரின் தமிழ் பற்றிய கவிஞர் பெரி.சிவனடியான் கவிதை பின்வருமாறு.

வள்ளுவனார் தமிழுணர்வைக் காட்டுதற்கு
மனங்கொண்டே திருக்குறளை யாத்த போழ்தில்
உள்ளுறையும் இறைவனுக்கு உவமையாக
உயிரகரம் முதலென்று தொடங்கிவைத்தார்
தெள்ளுதமிழ்ச் சட்டத்தைச் செய்த நூலோன்

(பெரி. சிவனடியயான், கனிக்குவியல்.ப.70)

என்ற பாடலில் வள்ளுவர் அகரத்தையும் இறைவனையும் ஒன்றுக்கு ஒன்று காட்டாக அமைத்த பண்பினை மெச்சுகிறார் கவிஞர்.

கவிஞர்களின் மணிமுடியாய் வாழ்ந்த கம்பன்
கள்ளிருக்கும் மலர்போன்ற சொல்லெடுத்துப்
புவிமெச்சும் காப்பியத்தைப் பொழிந்தெடுத்தான்
புகழுச்சி மேல்நின்று தமிழைக் காத்தான்
கவிதையிலே காகுத்தன் வில்லின் ஆற்றல்
காட்டுங்கால் தமிழுணர்வைக் கனியச் செய்தான்

(பெரி. சிவனடியயான், கனிக்குவியல்.ப.70)

என்ற பாடலின் வழி கம்பனின் கவிதையாற்றலையும், அவர் தன் முன்னோடி என்பதையும் நிறுவுகிறார் பெரி.சிவனடியான்.

பாரதியாரும் இவரின் முன்னோடிகளில் ஒருவர் ஆவார்.. அவரைப்பற்றி

எட்டயபுரத்திலொரு கவிஞன் தோன்றி
எட்டாத உயரத்திற் கெழுந்து சென்று
பெட்டகத்திற் குள்ளிருந்த தமிழை வாரிப்
பேதைகளும் அள்ளும் வகை விட்டெறிந்தான்
கட்டுவிடாப் பெண் போன்ற கவிதைப் பெண்ணைக்
கட்டகலா விதத்தினிலே எளிமையாக்கிக்
கொட்டுமழை போல் ஏட்டில் கொட்டிக் கொட்டிக்
கூறுகிறான்

(பெரி. சிவனடியான். கனிக்குவியல்.ப.71)

இப்பாடலின் வழியாகப் பாரதியாரின் கவி எளிமை இவருக்கு முன்னோடியாகத் திகழ்ந்தது என்பது தெரியவருகிறது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் இவர் பல கவியரங்கங்களில் பங்கேற்றுள்ளார். பாரதிதாசனுடன் நெருங்கிய தொடர்புடைய கவிஞர் அவரையும் தன் முன்னோடி என்று அழைத்துக் கொள்வதில் பெருமை கொண்டுள்ளார். மேலும் பாரதிதாசன் பரம்பரைக்கவிஞராக இவர் அறியப்படுவதற்கும் பாரதிதாசனாரின் மேல் கொண்டே பற்றே காரணம் ஆகும்.

பாரதியின் பின்வந்த பாவின் வேந்தன்
பட்டாளச் சொல்லெடுத்துத் தோட்டா செய்தான்
கூரதிகம் கொண்டபோர் வாளைத் தூக்கி
குத்தீட்டிப் பாக்களினால் கொடுமை தீர்த்தான்
சீரதிகம் கொண்ட தமிழ்த் தாயை எண்ணிச்
சிந்தையெல்லாம் நெக்குருகிக் கண்ணீர் விட்டான்
வேரதனில் அந்நீரைப் பாய்ச்சிக் காத்து
வீழ்ந்திருந்த தமிழுணர்வை மீட்டுத் தந்தான்.

(பெரி. சிவனடியான், கனிக்குவியல், ப.71)

இப்பாடலில் புரட்சிக்கவிஞரின் பாடல்கள் ஆயுத மொழி பேசுபவை என்பதைக் கவிஞர் காட்டுகின்றார்.

பாரதி, பாரதிதாசனைத் தொடர்ந்து, கண்ணதாசனைத் தன் முன்னோடிகளில் முக்கியமானவராகச் சிவனடியான் கொள்கிறார்.

பாரதிரத் தமிழ்ப் பாக்கள் படைத்தோன்
உத்திகள் ஆயிரம் ஒருங்கே சேர்த்தோன்
வழுவா மரபில் வார்த்துக் கொடுத்தோன்
எழுதாப் பொருளெலாம் எழுதி முடித்தோன்
மனத்திலும் வேகமாய் மதுக்கவி வரைந்தோன்
எண்ணி கருத்தை எழுதுதலோடு
பண்ணிற் கேற்பப் பாடியும் காட்டித்
திரையில் அற்புதம் செய்து முடித்தோன்
இசையும் பாட்டும் இணங்கியதாலே
வசையிலாப் பாடலை வாரி வழங்கினோன்
பாடிப் பாடிப் பரவசம் உற்றோன்
பாடிய பாட்டால் பலகோடி பெற்றோன்
தேடிய கோடியைச் சேர்க்காது விட்டோன்

(பெரி. சிவனடியான் கவிதைகள், ப.133)

கவியரசு கண்ணதசானின் வாழ்வை, இலக்கிய ஆக்கத்தை விமர்சிப்பதாக இக்கவிதை உள்ளது. அவரிடம் உள்ள நல்லவற்றை இவர் ஏற்றுக்கொண்டார். அல்லனவற்றை இவர் விலக்கிக் கொண்டார்.

இவ்வாறு பற்பல கவிஞர்களைத் தன் முன்னோடிகளாகக் கொண்டுத் தன் கவிதைப் பயணத்தை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளார் கவிஞர் பெரி. சிவனடியான்.

கவிஞர் பெரி. சிவனடியானின் படைப்புகள்

கவிஞர் சிவனடியான் எழுதிய படைப்புகள் பின்வருமாறு.

நாடகம்

அவளுக்காக, செல்வி பதிப்பகம், காரைக்குடி, முதற்பதிப்பு, 1950

இரண்டாம் பதிப்பு 1962, மூன்றாம் பதிப்பு, 1997

குறுங்காவியம்

வான்மதி, முத்துப் பதிப்பகம், விழுப்புரும், முதற்பதிப்பு 1997,

இரண்டாம் பதிப்பு, 2000

கவிதைப் படைப்புகள்

சிவனடியான் கவியரங்கக் கவிதைகள், செல்வி பதிப்பகம்,

காரைக்குடி, முதற்பதிப்பு 1984.

பெரி. சிவனடியான் கவிதைகைள், மணிவாசகர் பதிப்பகம்,சென்னை

முதற்பதிப்பு, 1998

கனிக்குவியல், முத்துப்பதிப்பகம், விழுப்புரம், முதற்பதிப்பு, 1955

கடவுள் வணக்கக் கவிதைப் படைப்புகள்

அமராவதிப் புதூர், அருள்மிகு கருப்பர் வழிபாட்டு பாடல்கள்,

முதற்பதிப்பு 1993, இரண்டாம் பதிப்பு 1995,மூன்றாம் பதிப்பு, 2004

அருள்நின்ற பரமகுரு சுவாமிகள் வரலாறும் பதிகமும், 1994

சக்தியும் மைந்தனும், முத்துப்பதிப்பகம், விழுப்புரம் 1982

சக்தி சரணங்கள், சக்தி பக்தர்கள் , விழுப்புரம், 1982

அருள்மிகு அய்யப்பன் சரணக்கோவை,1988

முருகாஞ்சலி, திருமகள் இல்லம், மதுரை, 1976

சக்தி விருத்தங்களும், சந்நிதி வெண்பாக்களும், பரமகுரு பதிப்பகம்,

விழுப்புரம் 2000

கட்டுரை

முயல்வது மதி, முடிப்பது விதி, ஓம் சக்தி பப்ளிகேஷன்ஸ்,

விழுப்புரம், 2002

வாழ்க்கை வரலாறு

சக்கரைக் குருசுவாமியின் ஆன்மீக வாழ்வும், சபரிமலை

பாதயாத்திரையும், அய்யப்ப பக்தர்கள், 1998

குழந்தை இலக்கியம்

பாடி ஆடு பாப்பா, முத்துப்பதிப்பகம், விழுப்புரம், 2000

படிக்க நடிக்க சிறுவர் கதைப்பாட்டு, முத்துப்பதிப்பகம், விழுப்புரம்,

வில்லுப்பாட்டு

காந்தி கலாநிலைய உயர்நிலைப்பள்ளி வரலாறு, காந்தி கலாநிலைய மாணவர் இலக்கிய மன்றம், எரிசினம்பட்டி, மலர் அமரத்துவம் அடைந்த பெரி. விசாலாட்சி ஆச்சி

முதலாண்டு நினைவு மலர்

இவ்வாறு பற்பல படைப்புகளை இவர் படைத்தளித்துள்ளார்.

பெற்ற விருதுகள்

இவர் பல பாராட்டுகளையும், பட்டங்களையும் பெற்றுள்ளார். திருப்பனந்தாள் பாவலர் மன்றம் இவருக்குச்

சிந்தனைக் கவிஞர் என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. இப்பட்டமே இவரை அடையாளப்படுத்தும் பட்டமாக விளங்குகிறது.

மதுராந்தகம் குருபழனி ஆதீனம் இவருக்கு கவிஞரேறு என்று பட்டத்தை வழங்கிப் பாராட்டியுள்ளது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டு இவருக்குத் தமிழக அரசு திருக்குறள் நெறித் தோன்றல் என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொன்னூற்றொன்றாம் ஆண்டில் இவருக்குத் தமிழக அரசு பாவேந்தர் விருதினை வழங்கிப் பெருமை சேர்த்தது.

பாரங்கள் மேலேறப் பலவூர்கள் சுற்றியபின்
பார்க்கவுனை ஓடிவந்தேன்
பாதகமாய் எண்ணாமல் பராசக்தி மைந்தன் நீ
பாசத்தோடு எனை அணைத்தாய்
வேரறுந்து போகாமல் விளைச்சலை எனக்கீந்து
விருது பெற வைத்த தேவே

(பெரி. சிவனடியான், சக்தி விருத்தங்களும், சந்நிதி வெண்பாக்களும், ப. 9)

என்று தான் பெற்ற பாரதிதாசன் விருதினைத் தன் கவிதைக்குள் பதிவு செய்கிறார் பெரி. சிவனடியான். தனக்குக் கிடைத்த விருதைத் தன் ஊரான வீரசேகரபுரத்தில் உள்ள சித்திவிநாயகர் அருளால் கிடைத்தது என்று அந்தத் தெய்வத்தின் முன்னிலையில் வைக்கிறார் கவிஞர்.

இவ்வாறு பற்பல பாராட்டுகளுக்கு உரியவராக இவர் விளங்கியுள்ளார்.

எழுதிய இதழ்கள்

எழில், குமரன், பொன்னி, அருவி, அழகு, வாழ்க்கை, கலை, கலைமன்றம், தென்றல், தென்றல் திரை, மாதவி , இனமுழக்கம், தமிழ்ச்செய்தி, கண்ணதாசன், முல்லைச் சரம், திராவிடநாடு போன்ற பல இதழ்களில் இவர் பற்பல கவிதைகளை

வரைந்துள்ளார். அவை தொகுக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. அவை தொகுத்தால் இவரின் படைப்புகளின் எண்ணிக்கை அளவு மிக உயரும்.

இலக்கியப் பணிகள்

சுருள் சுருளான முடிக் கோர்வை. கருப்புச் சட்டம் கொண்ட மூக்குக் கண்ணாடிக்குள் அமைதி தவழும் கணகள், நெற்றியில் திலகம், நறுக்கி வைக்கப்பட்ட மீசை, புன்முறுவல், உடல் அசையாத நடை, இனிய பேச்சு, மற்றவர்களின் குணமறிந்து பழகும் உள்ளம் இத்தனையும் பெற்றவர் கவிஞர் பெரி. சிவனடியான். ஓர் அமைதியான கவியுருவம் கவிஞர் பெரி. சிவனடியான். உடல் அழகு ஒருபுறம் என்றாலும் கவியழகு அவரின் எக்கவிதையிலும் தொனிக்கும்.

கவிஞர் பெரி.சிவனடியான் ஐநூறுக்கும் மேற்பட்ட கவியரங்குகளில் கலந்து கொண்டுக் கவிதை பாடியுள்ளார். இவரது கவியரங்கக் கவிதைகள் தனித் தொகுப்பாக வந்துள்ளது. இன்னும் பல தொகுதிகள் தொகுக்கப்படும் அளவிற்கு அக்கவிதைகள் உள்ளன.

கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு, கலைமாமணி மா. வரதராசன், கவியரசு கண்ணதாசன், தவத்திரு குன்றக்குடி அடிகளார், கலைஞர் கலைவாணன், கவிஞர் க. தேசிகன், கவிஞர் முடியரசன், பாவேந்தர் பாரதிதாசன், புலவர் குழந்தை, பாலகவி ச.து.சு. யோகியார், வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன், அண்ணல் பு. அ. சுப்பிரமணியனார், பேராசிரியர் நா.சுப்புரெட்டியார், பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம், கவிஞர் மு. அண்ணாமலை, திருமுருக கிருபானந்த வாரியார், திருக்குறளார் வீ. முனுசாமி, தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கம், கவிஞர் புவியரசு, கவிஞர் அப்துல்ரகுமான் போன்ற பலர் தலைமை ஏற்க கவியரங்குகளில் இவர் கவிதை படைத்துள்ளார்.

இவரது கவியரங்கக் கவி வளத்தைப் பின்வரும் கண்ணதாசனின் பாடலடிகள் காட்டும்.

சிவனடியான் சிவனடியான் என்கின் றாரே
சிவனுக்கோ இவனடியான்? இல்லை இல்லை
இவனறியும் தமிழ்க்கவியின் பெருமை எல்லாம்
சிவன் கேட்பான் இவனவனின் அடியான் என்றால்
எவன் கேட்பான்? இவன் அன்பில் தோய்ந்ததாலே
இவனுக்கே சிவனடியான் தமிழ் நல்லீர்

(பெரி. சிவனடியான் கவியரங்கக் கவிதைகள், ப. 112)

என்ற பாடலின் வழி இவரின் கவியரங்க கவிப்புலமையைக் கண்ணதாசன் வெளிப்படுத்துகிறார்.

பாவேந்தர் பாரதிதாசனும் இவரின் கவியரங்கக் கவிதையழகில் உள்ளம் பறி கொடுத்தவர். .அவர் இவரைப் பின்வருமாறு அறிமுகம் செய்கின்றார்.

சிவனடியார் செந்தமிழ்ச்சீரடியார்ஆனால்
எவனடியான் எவனாண்டான் நாட்டில் எவனும்மொழி
காக்க எழுந்த கருஞ்சிறுத்தை நம்மாசு
நீங்க எழுந்த நெருப்பு

(சிவனடியான் கவியரங்கக்கவிதைகள், ப.184)

என்ற இப்பாடலில் தமிழ் காக்க எழுந்த நெருப்பாகக் கவிஞரைக் காண்கிறார் பாரதிதாசன்.

கவியரங்குகள் தவிர பட்டிமண்டபங்கள், வழக்காடு மன்றங்கள் ஆகியவற்றில் நடுவராகப் பங்கேற்று இவர் ஆற்றிய மேடைப்பணிகளும் பலவாகும்.

கலைமன்றம் என்ற இதழில் இவர் கவிதைகள் புனையவும், அவ்விதழுக்கு வரும் கவிதைகளைத் தேர்ந்து தரவும் வாய்ப்பு நல்கப்பெற்றது. இதன் ஆசிரியராக இருந்தவர் விருதை ந. இராமசாமி ஆவார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தைந்தாம் ஆண்டில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டு நடப்புகளை அடியொற்றி இவர் படைத்த கவிதைகள் கலாநிலையம் சார்பாக மாநாட்டுக் காவியம் என்ற தலைப்பில் வெளியிடப்பெற்றன.

மாதவி என்ற இதழில் கவிஞர் பெரி. சிவனடியானுக்குத் தனித்த இடம் தரப்பெற்றது. செய்திக் கவிதை என்ற தலைப்பில்

கீழ் அன்றைய அன்றைய செய்திகளைக் கவிதையாக வடித்துத் தர கவிஞர் பெரி. சிவனடியான் நியமிக்கப்பெற்றார்.

இவரின் வான்மதி காவியம் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பாட நூலாக வைக்கப்பெற்றது.

இவரின் பாடல்கள் பல ஒலிநாடக்களாக வெளிவந்துள்ளன.

இவர் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தொன்றாம் ஆண்டு நிகழ்ந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டு கவிதை வாசித்தார். கவியரசு கண்ணதாசன் அவர்கள் தலைமையில் , தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் முன்னிலையில் இவர் கவிதை வாசித்தார்.

அக்கவிதையின் ஒரு சில பாடலடிகள் பின்வருமாறு. கவிஞர் பெரி. சிவனடியானுக்கு வழங்கப்பெற்ற தலைப்பு கூடல் என்பதாகும்.

ஊடல் தவிர்க்க ஒருவழிதான் உண்டுலகில்
வேடிக்கை இல்லை வினயமாய்ச் சொல்லுகின்றேன்
மாடப் புறவாடி மருகுகிற நேரத்தில்
வாடி போடியென்று வையாமல் போராடி
வேல்விழியாளொடு வீம்பாகப் பேசாமல்
காலில் விழுந்துவிடு. காண்பாய் நீ பேரின்பம்
அனுபவத்தைச் சொல்கின்றேன் அகில உலகிற்கும்
பனுவல் திருக்குறளும் பகர்கின்ற பாடமிது

(பெரி. சிவனடியான் கவிதைகள்,ப.85)

என்பதாகக் கூடல் நிலைக்க கூடல் நகரில் கவிதை வாசித்துள்ளார் கவிஞர்.

இவ்வாறு பற்பல இலக்கியப் பணிகளை ஆற்றிச் சிறந்துள்ளார் கவிஞர் பெரி. சிவனடியான்.

அவரே எழுதிய தன்மதிப்பீட்டுக் கவிதை ஒன்று பின்வருமாறு.

வகுப்பறையில் மாணவர்கள் விரும்பும் வகை தமிழ் சொல்லி
வாழ்ந்துபணி முடித்துவிட்டேன்

வளர் இளமைப் பருவம் முதல் வந்த தமிழ் ஏடெல்லாம்
வரிசையாய்ப் பாடி விட்டேன்
தகுதியுடையார் கூட்டும் கவியரங்கேறிநான்
சன்மானம் பெற்றுவிட்டேன்
சன்மானம் இல்லாமல் சாற்றுகவி கேட்டார்க்கும்
சலியாது பாடிவிட்டேன்
பகுத்தறிவுப் பாதையிலே சிலகாலம் சென்று நான்
படைத்தவனைத் திட்டிவிட்டேன்
பகுத்துணர்ந்து பின்நாளில் படைத்தவனே கதி'யென்று
பாடியும் பகர்ந்துவிட்டேன்
வகுத்தான் வகுத்திட்ட வழியன்றி வேறொன்றும்
வாராது அறிந்து கொண்டேன்
வகுத்தவனே கதியென்று வருவதெலாம் எதிர்கொண்டு
வாழ்வழி தேடுவேனே!

(பெரி. சிவனடியான் கவிதைகள், ப. 183)

என்ற கவிதையின் வழிக் கவிஞர் தன் வாழ்வுப் பயணத்தைத் தானே மதிப்பி'டுக்கொள்கிறார்.

கவிஞர் சிலகாலம் பகுத்தறிவுச் சார்பாளாராக இருந்த நிலையும், பின்னர் கடவுள் வகுத்தவழியில் தான் செல்வதன்றி வேறுவழியில்லை என்று அவர் வாழ்ந்த நிலையும் மேற்பாடல் வழியாகத் தெரியவருகிறது.

இப்பாடலில் இடம் பெறும் கருத்தான மாணவர் விரும்பும் வண்ணம் பேராசிரியர்கள் பாடம் நடத்தவேண்டும் என்பது இக்காலத்திற்கு ஏற்ற ஆசிரிய நடைமுறையாகும். கல்லூரி மாணவர்கள் அமர்ந்திருக்கும் வகுப்பில் ஆசிரியர் தான் விரும்பும் வண்ணம் பாடம் நடத்திச் செல்ல இயலாது என்ற குறிப்புப் பொருள் இதனுள் தொனிக்கிறது. ஆசிரியரின் நாவன்மை, அறிவுத் திறன் ஆகியவற்றை வெளிப்படுத்தும் களமாகத் தற்கால் கல்லூரி வகுப்புகள் இல்லை என்பதை பெரி. சிவனடியான் இக்கவிதை வழி உணர்த்தியுள்ளார். எனவே அவர் எடுத்த முடிவு மாணவர் விரும்பும் வண்ணம் பாடம் நடத்துதல் என்பது. அதனை இக்காலப் பேராசிரியர்களும் பின்பற்ற வேண்டும் என்பதைச் சொல்லாமல் சொல்கிறார் கவிஞர்.

இப்பாடலில் கவியரங்கம் ஏறிய காலங்களில் சற்றுப் பொருள் வருவாய் இருந்த நிலையையும் உண்மையாக அறிவிக்கிறார் கவிஞர். மேலும் ஒன்றுமே தராமல் சாற்றுக்கவி கேட்டவர்க்கும் அவர் கவிதை தந்துள்ளார் என்பது அவரின் கருணை சார்ந்த நடப்பியல் வாழ்க்கையாகும்.

இவ்வாறு ஒரு கவிஞரின் வாழ்வில் துயரங்கள், மாற்றங்கள், ஏமாற்றங்கள், சற்றே ஏற்றங்கள் கலந்து நிகழ்ந்திருப்பதைப் பெரி. சிவனடியான் கவி வாழ்க்கை காட்டுகின்றது.

சிந்தனைச் செல்வம்

கவிதைக்குப் பாடுபொருள் மிக அவசியம். புதுச் சொல் வளம் இன்னும் அவசியமாகத் தேவை. சொற்கட்டுமானம் கவிதையின் வலிமையாகும். பொருள்வளம், சொல்வளம் இதைத்தாண்டி ஓசைவளமும் அமைந்தால் கவிதை மற்றவர்தமை ஈரக்கும் இயல்பினைப் பெற்றுவிடும். தான் எடுத்துக்கொண்ட பாடுபொருளைக் கவிதையாக்கும் நிலையில் சொல்லுக்கும், பொருளுக்கும், உணர்விற்கும் இசைக்கும் இயல்பானவற்றைத் தருவது என்பது கவிஞர் பெரி. சிவனடியானின் கவிதைப் போக்கு ஆகும். இவ்வனைத்திலும் வெற்றி பெற்ற கவிதைகள் அவரின் கவிதைகள் ஆகும். இவரின் கவிதைகளில் அறிவுக்கு விருந்து தரும் சிந்தனை முத்துக்கள் கொட்டிக் கிடக்கும். இச்சிந்தனை முத்துக்கள் படிப்பவரின் மனதில் ஆழப் பதிந்துவிடும் தன்மையன.

கவியரங்கக் கவிதை, இதழ்க்கவிதை எதுவானாலும் எளிதில் புரியும்படி எழுதுவது இவரின் தனிச்சிறப்பு. தமிழ் உணர்வு, திருக்குறள் கருத்துச் சார்பு, சமுதாய விழிப்புணர்வு, குடும்ப நலம், பக்தி அடிமை ஆகியன கவிஞரின் கவிதைகளில் பரவிக் கிடக்கின்றன. அவை செய்திகளாகவும், சிந்தனைகளாகவும் ஆங்காங்கே தெரித்து நிற்கின்றன. அவற்றில் சிலவற்றை அறிவதன் வழி அவர் கவிதைகளின் தரத்தை அறிந்து கொள்ள இயலும்.

தமிழுணர்வு

இளமை முதலே தமிழுணவர்வைப் பெற்று வளர்ந்துவர் கவிஞர் சிவனடியான். இவருக்குத் தமிழுணர்வை ஊட்டி வளர்த்தவர்கள் இவர்தம் ஆசிரியப் பெருமக்கள் ஆவர். ஆசிரியர்கள் ஊட்டிய தமிழுணர்வு மிகச் சிறப்பாக இவரது படைப்புகளில் வெளிப்பட்டுள்ளது.

காலையும் மாலையும் கண்ணுறங்கும்போதும்
வேலைசெய்து களைத்து வீடு திரும்பும்போதும்
வாழ்விலும்
பாலும் பழமும் என்றன் பாவை தரும்போதும்
பசியால் உடல் வருந்திப் பாடுபடும்போதும்
பைந்தமிழ்ச் சொல்லெடுத்துப் பாட்டெழுதும்போதும்
நொந்து பிறர்க்குக் கடன் நோட்டெழுதும்போதும்
பாட்டைச் சுவைத்து மக்கள் பாடி மகிழும்போதும்
கேட்டுச் சிரித்துச் சிலர் கிறுக்கன் எனும்போதும்
வாழ்விலும் தாழ்விலும் நீயே துணை
செந்தமிழ்த்தாயே உன்றன் சிந்தனை இருப்பதனால்
வாழ்விலும் தாழ்விலும் நீயே துணை

(பெரி. சிவனடியான் கவிதைகள், பக். 46-47)

என்னும் தமிழே துணை என்ற கவிதையில் தமிழ் வாழ்விலும் தாழ்விலும் தனக்குத் துணையாகும் என்ற நிலையைப் பாடுகின்றார் கவிஞர் பெரி. சிவனடியான்.

பாரதித்தாசனும் நைந்தாய் எனில் நைந்துபோகும் என் வாழ்வு என்று பாடும் திறத்தை மேல் கவிதையோடு ஒப்பீட்டுப் பார்த்தால் இருவரும் ஒரு வழிப்பாதை செல்லும் கவிஞர்கள் என்பது புலனாகும்.

இந்தித் திணிப்புப் போராட்டம் நடைபெற்ற காலத்தில் கவிஞர் அண்ணாமலைப் பல்கலைகயில் உலவியவர் ஆகையால் தமிழ் காக்க அவரும் கவிபுனைந்தார்.

மொழியிழந்த வாழ்வினிலும்
முடிந்துவிடல் நன்றிலையா
விழிகள் பறிபோனபின்னர்
வீதிவழி செல்வாயா?
பழியைத் துடைக்காமல்
பார்த்துக் கொண்டிருப்பாயா
அழிக்கவரும் மொழியெதையும்
அகற்றப் புறப்படு நீ

என்று போர்க்கீதம் பாடுகிறார் கவிஞர் பெரி. சிவனடியான். இந்தி மொழி ஆதிக்கத்தால் தமிழ் அழியும் எச்சரிக்கையை இப்பாடலில் அவர் எடுத்துரைக்கிறார்.

மற்றொரு இடத்தில் இந்திப் போராட்டத்தில் உயிர் நீத்த தாளமுத்துவின் தியாகத்தை நினைவு கூர்ந்துத் தமிழுக்கு உரமூட்டுகிறார் கவிஞர்.

உயிராகத் தமிழ்காக்க உயிரை விட்ட
உயர்தொண்டன் தாளமுத்து நடனம் எங்கே

(சிவனடியான் கவியரங்கக் கவிதைகள், ப.80)

இவ்வாறு இந்தித் திணிப்பை எதிர்க்கும் கவிவாணராக பெரி. சிவனடியான் விளங்கியுள்ளார்.

கவிஞர் பெரி . சிவனடியான் தமிழ் காக்க உழைத்த பலரைத் தம் கவிதைகளில் எடுத்துக் காட்டிப் படிப்பவரைத் தமிழ் உணர்வு கொள்ள வைக்கின்றார். தமிழ் காக்க உழைத்தோரின் வழியில் தமிழ் மொழி சிறக்க, தமிழ் உணர்வு தழைத்தோங்கப் பாடுகிறார் கவிஞர் பெரி. சிவனடியான்.

தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதய்யரின் தமிழ்ப்பணியை எடுத்துக்காட்டும் கவிதை பின்வருமாறு.

தமிழ் வாழத் தாம் வாழ்வார் இல்லாராகித்
தாம் வாழத் தமிழ் வாழ்த்தும் இந்த நாளில்
தமிழ்வாழத் தான் வாழ்ந்த சாமினாதன்
தான் விட்ட பெரும்பணியைத் தொடர்வார்யாரோ?
இமிழ் திரைசேர் பெருங்கடலாய் வாழ்ந்தார் அய்யர்
இனும் சிலநாள் நம்மிடையே வாழ்ந்திருந்தால்
அமிழ்ந்துவிட்ட சுரங்கத்தை ஆய்ந்து காணா
அணிவளையைக் குண்டலத்தை எடுத்திருப்பார்

(சிவனடியான் கவியரங்கக் கவிதைகள், ப.62)

என்ற கவிதையில் வளையாபதி, குண்டலகேசி ஆகிய காப்பியங்களை உ.வே.சாமிநாதர் இன்னும் சில நாள்கள் இருந்திருந்தால் வெளிப்படுத்தியிருப்பார் என்று குறிப்பிடுகின்றார்.

அறிஞர் வ.சுப. மாணிக்கனார் தமிழ்த்தொண்டினைத் தன் கவிதையில் ஏற்றி இவர் பாடியுள்ளார்.

எண்ணிறந்த நூல்கள் எழுதிடினும் சில சொல்வேன்
தண்ணார் தமிழ்க்காதல் தமிழுக்கோர் தேனருவி
கம்பர் என்னும் ஆய்வுரையோ கடைந்தெடுத்த
தெள்ளமுது
கொம்பர் எவரும் கூறாத புதுக்கருத்து
ஆவி தமிழென்று அவர் வாழ்ந்த காரணத்தால்
காமராசர் பல்கலையில் கனிந்த பணி
துணைவேந்தர்
துணைவேந்தராகித் துலங்கியநம் வ.சுப.
அணையாக் பெருவிளக்கு அடிபணிந்து
வாழ்த்துகிறேன்

(சிவனடியான் கவிதைகள், ப. 117)

வ.சுப. மாணிக்கனாரின் ஆய்வுத்தமிழ்ப் பணியைப் போற்றிப் பாராட்டுகிறார் கவிஞர். அவரின் தமிழ்வாழ்வால் மதுரை காமராசர் பல்கலையின் துணைவேந்தர் பொறுப்பு கிடைத்தது என்றும் அவர் காட்டுவது தமிழுக்கு ஏற்றம் தரும், தமிருக்கும் ஏற்றம் தரும்.

திருமுருக கிருபானந்த வாரியார் தம் தமிழ்த் தொண்டுகளையும் இவர் புகழ்ந்துப் பாராட்டியுள்ளார்.

மணிவிழா பவளவிழா வைரவிழாக் கண்டாலும்
மாறாத இளமை மிக்கோன்
வயலூரில் அருள்பொழியும் திருமுருகன் வழிபாட்டை
மறவாமல் தினமும் செய்தோன்
அணியணியாய்ச் சிவமாலை அன்றலர்ந்த பூமாலை
அகலாமல் அணிந்த மார்பன்
பேசாத நாளெல்லாம் பிறவாத நாளென்று
பெரும்பணியை நாளும் செய்தோன்
பணிவாகக் கனிவாகப் பார் முழுவதும் ஆன்மிகம்
பரவும் வகை சேவை செய்தோன்
பகலிரவும் திருப்பணிக்குப் பாடுபட்ட நற்றொண்டன்
பைந்தமிழ்ச்சீர் வாரியாரே

(சிவனடியான் கவிதைகள்,ப.141)

என்ற பாடலில் வாரியாரின் புகழை, தொண்டுகளை விரித்துரைக்கிறார் கவிஞர் பெரி. சிவனடியான்.

தமிழ் நாட்டில் நல்ல தமிழ்வாணர்களால் நல்லதமிழும் வளர்ந்து வருகிறது என்ற நம்பிக்கையும் கவிஞர் உள்ளத்தில் உதித்திருக்கிறது.

எங்கும் தமிழ் முழக்கம் எதிலும் தமிழ் முழக்கம்
பொங்கிப் பொலிவதற்குப் புகழாரம் சூட்டிடுவேன்
தேவாரம் தேனாறாய்ச் செவிகளிலே பாய்கிறது
போவார் வருவார் புரிந்து வணங்குகின்றார்
ஒருவாசங் கூட உணராத பாமரர்க்கு
திருவாசகமின்று தேனாய் இனிக்கிறது
வாரியார் கீரன் வழங்கும் தமிழ்கேட்கதச்
சேரிக்குடியினரும் திரண்டு வருகின்றார்
கவிஞர்கள் பட்டாளம் கணக்கில் அடங்காது
செவி குளிரக் கவியரங்கம் திருமணத்தில் நிகழ்கிறது
பட்டிமன்றம் மக்கள் நடைப் பாதையிலே நடக்கின்றது.
கொட்டும் தமிழ்கேட்கக் கூடுகிறார் இலட்சம் பேர்
நல்ல தமிழ்ச்சொல்லை நாளும் நாம் கேட்குங்கால்
வெள்ளம்போல் உள்ளம் வெகுவாய் இனிக்கிறது
வளரும் தமிழை வரப்பெடுத்துக் காத்திடுவோம்
வளமான சொல்லெடுத்து வாய்குளிரப் போற்றிடுவோம்
வெல்லும் த்மிழ்ச்சொற்கள் மேலும் பெருகிவர
ஒல்லும் வகையில் உழைப்போம் தமிழ்நாட்டில்

என்ற கவிதையின் வழி தம் கால நல்ல தமிழ் வாணர்களைப் பெரி. சிவனடியான் அடையாளம் காட்டியுள்ளார். மேலும் அவர்களின் தமிழ்த்தொண்டுகளின் வழித் தமிழ் வளரும் என்ற நம்பிக்கையைக் கவிஞர் இக்கவிதைக்குள் வைத்துள்ளார்.

இவ்வாறு தமிழ் வளர தமிழ்ச்சான்றோர் பணிகளைக் கவிதைகளில் வடித்து தமிழ் உணர்ச்சியைச் சிந்தனைக் குவியல்களாகத் தந்துள்ளார் கவிஞர் பெரி. சிவனடியான்.

திருக்குறள் கருத்துச் சார்பு

கவிஞர் பெரி. சிவனடியான் திருக்குறள் கருத்துகளைத் தம் உளம் கொண்டவர். திருக்குறள் கருத்தில் தோய்ந்து எல்லாச் சிக்கல்களுக்கும் திருக்குறள் வழிகாட்டும் என்று உறுதிபட உரைத்தார்.

வள்ளுவர் பிறப்பால் வந்தது பெரும்புகழ்
வண்டமிழ் நாட்டினர்க்கே
உள்ளம் தெளிந்து உலகினர் உய்ய
உதித்தது திருக்குறளே

அடியடி இரண்டால் அத்தனை எண்ணத்தையும்
அளப்பது திருக்குறளே
படிபடியென்று பகலும் இரவும்
பகர்வது திருக்குறளே

(பெரி. சிவனடியான் கவிதைகள்,ப. 113)

என்று வள்ளுவத்தின் பெருமையைக் காட்டி நிற்கிறார் கவிஞர் பெரி. சிவனடியான்.

வள்ளுவர் காட்டும் கற்புநெறியைத் தன் கவிதைக்குள் அடக்குகிறார் கவிஞர் பெரி. சிவனடியான்.

குறள் கூறும் பெண்மைக் குணம் நாடி செல்லத்
திறங்கொண்ட மங்கைச் சிறப்புக்குக் கற்பென்றான்
கற்புக்குத் தற்காப்பு காவலில் பெண்டிர்மனம்
நிற்கும் நிறையால் நிலைக்கும் அப்பண்பென்றான்
கொண்டானைக் கொண்டாடிக் கூடிக் களிப்பவளே
பெண்ணான பெண்ணாவாள் பேணாதாள் புண்ணாவாள்

(சிவனடியான் கவியரங்கக்கவிதைகள், ப.197)

என்று வள்ளுவர் வகுத்த கற்பு இவர் பாடலில் படியெடுக்கப்பெற்றுள்ளது.

வள்ளுவர் வகுத்த காதலை இவர் தொகுத்துப் பின்வருமாறு உரைக்கின்றார்.

மலரைவிட மெல்லியது காமம் கொண்டார்
மறைந்திடவே முடியாத தாகம்வேகம்
நிலங்காத்த நீரைப்போல் நெஞ்சில் ஊற
நினைப்பெல்லாம் அதுவாக்கி நீளும் கோலம்
தலைவனவன் பிரிந்துவிடின் தகிக்கும் காதல்
சாகும்வரை அவனை எதிர் நோக்கும் காதல்
நிலையாது காதல் ஒரு தலையாய் நின்றால்
நெடும்பாரம் இரு நெஞ்சால் தாங்க வேண்டும்

(சிவனடியான் கவியரங்கக் கவிதைகள், ப. 142)

வள்ளுவர் காட்டிய காதலின் வேகத்தை அளந்துரைக்கும் கவிதை இதுவாகும்.

'வள்ளுவர் காட்டிய குடி பற்றிய செய்திகளை மற்றொரு கவிதையில் விரித்துரைக்கிறார் கவிஞர் சிவனடியான்

குடிபிறந்தார் சிறுவடுவும் திங்கள் கொண்ட
குறையைப் போல் உலகிற்குப் பெரிதாய்த் தோன்றும்.

அடிப்படைப் பண்பாடுகளில் இழிவு காணின்
அவன் பிறந்த குடியினிலே ஐயம் தோன்றும்
படித்தறியாப் பாமரனும் பண்பு காத்துப்
பழந்தமிழர் மரபுயர்த்த வேண்டுமென்றே
துடித்தெழுந்த வள்ளுவனார் எழுதிச் சென்றார்
சுவைத்துணர்ந்தும் எத்தனைபேர் வாழ்வில்
கொண்டார்

(சிவனடியான் கவியரங்கக்கவிதைகள்.ப. 198)

என்று குடிச்சிறப்பு பற்றிய வள்ளுவரின் கருத்துகளை இவர் தொகுத்து முழங்குகின்றார்.

இவர்தம் கவிதைகளில் திருக்குறள் கருத்துகள் இல்லாத கவிதைகளே இல்லை என்ற அளவிற்கு இவர் கவிதைகளில் திருக்குறள் கருத்துகள் காணப்பெறுகின்றன.

சமுதாய விழிப்புணர்வு

மக்கள் சமுதாயம் அறியாமை இருள் நீக்கி அறிவு பெற சமுதாய விழிப்புணர்வுக் கவிதைகளை இவர் இயற்றினார். இவரின் சமுதாய விழிப்புணர்வுக் கவிதைகள் உள்ளதை உள்ளபடிச் சொல்லும் நேர்மை கொண்டவை.

சமுதாயத்தில் அன்பு, கருணை, இரக்கம் கொண்டு மனிதர்கள் வாழ வேண்டும் என்று பெரி. சிவனடியான் விரும்புகிறார். இக்குணங்கள் இல்லாத மனிதர்கள் விலங்குகள் என்பது அவரின் சிந்தனை.

அன்புடைமை அருளுடைமை கொண்டவனே மனிதன்
தன்னலமே சுகமென்று தனித்திருப்பான் மிருகம்
இன்பங்கள் எல்லோர்க்கும் பொதுவென்பான் மனிதன்
அன்றன்று சிலருக்கே அவையென்பான் மிருகம்.

கண்ணீரைக் காணிக்கை பெற்றிறப்பான் மனிதன்
கண்டவரைக் காசுக்குக் கைபிடிப்பான் மிருகம்.
கொண்டவொரு குறிக்கோளுக்கு உயிர் கொடுப்பான் மனிதன்
கொண்டதே கோலாமென குடிகெடுப்பான் மிருகம்.

(பெரி. சிவனடியான் கவிதைகள். ப. 95)

இவ்வகையில் மனிதப் பண்புகள் பற்றிக் கவிதை புனைந்துள்ளார் பெரி. சிவனடியான்.

சமுதாயம் முன்னேறுவதற்கான வழியையும் அவர் உரைக்கின்றார்.

பசிக்கின்ற ஏழையர்தம் வயிற்றைச் செல்வர்
பணம்வைக்கும் பெட்டகமாய்க் கொண்டால் போதும்
வசிப்பதற்குக் குடிசையிலா எளியோர் வாழ
வளர்நெஞ்சில் சிற்றிடத்தைத் தந்தால் போதும்
நசிப்பதற்குஇங்கு இடமேது? வறுமைஏது?
நலிவுஏது? சோர்வுஏது? வறுமைஏது?
பசிப்பிணிக்கு வள்ளுவர்செய் மருத்துவத்தைப்
பாட்டிதிலே சொல்லியுள்ளேன் பிறிதொன்றில்லை

(பெரி.சிவனடியான், கனிக்குவியல், ப.118)

என்ற இந்தக் கவிதையில் வறுமையாளரைத் தாங்கும் சமுதாயம் மலர்ந்துவிட்டால் துன்பமில்லை என்ற சிந்தனையை வலியுறுத்துகிறார் கவிஞர்.

மது, சூது ஆகியவற்றால் சமுதாயத்தில் ஏற்படும் இழிவுகளையும் கேடுகளையும் தம் கவிதைகளில் படைத்தளித்துள்ளார் பெரி. சிவனடியான்.

கட்டிய பெண்டாட்டியையும் மறத்தல் கூடும்
கனிவுடைய அன்னையையும் துறத்தல் கூடும்
பெட்டகத்துச் செல்வத்தை விடுதல் கூடும்
பெற்றெடுத்த மக்களையும் வெறுத்தல் கூடும்
கட்டிலறை வேசியையும் கடக்கக் கூடும்
கலையுலகை அரசியலை விலக்கக் கூடும்

தொட்டுவிடின் மண்ணிற்குள் மறையும் மட்டும்
தொலைக்க முடியாத பொருள் மது ஒன்றேதான்

(பெரி. சிவனடியான் கவிதைகள்,பக். 107-108)

என்ற கவிதையில் மது மண்ணுக்குள் போகுச் செய்யும்வரை மனிதரை விடாது என்று குறிப்பிடுகின்றார்.

ஆடுதற்குப் பிரியம் வரும் ரம்மிச் சீட்டில்
அடுத்தடுத்து ஜோக்கர்வரின் அகங்களிக்கும்
பாடவைக்கும் வெற்றிபெற்றால், தோற்றுப் போனால்
பத்தினியாள் தாலியிலும் கையை வைக்கும்
ஓடெடுக்கும் வரையினிலும் பணயம் வைக்கும்
உடுத்தியுள்ள வேட்டியையும் உறித்து வைக்கும்
நாடவைக்கும் பிறர் பொருளை மாட்டிக் கொண்டால்
நடுத்தெருவில் விலங்கிட்டு நடக்க வைக்கும்

(பெரி.சிவனடியான் கவிதைகள்.ப. 108)

இக்கவிதையில் சூதினால் வரும் தீமைகளை எடுத்துரைக்கிறார் கவிஞர். மது சூது ஆகிய தவறுகளில் இருந்து மனிதகுலம் திருந்த வேண்டும் என்ற நிலையில் இவரின் கவிதைகள் சமுதாய உணர்வுடையனவாக அமைகின்றன.

சாதி வேறுபாடுகள், மத வேறுபாடுகள் ஆகியன இடம்பெற்று இந்தியாவின் முன்னேற்றத்தைத் தடுத்துவருகின்றன என்று கவிஞர் பெரி. சிவனடியான் கருதுகிறார்.

நிலத்திற்குள் மறைந்திருக்கும் கனிகள் வெட்டி
நிலவுலகம் அத்தனைக்கும் வழங்கும் நாளில்
கலங்கொண்டு கடலாழம் கண்டு கண்டு
கலந்திருக்கும் எண்ணெய்வளம் காயும் நாளில்
மலமுகட்டில் பயிரிட்டு மனைகள் கட்டி
வளம் பெருக்க மக்களினம் முந்தும் நாளில்
கலக்கமுறச் செய்கின்ற சாதிச் சண்டை
காணும் நவ பாரதத்தின் முட்டுக்கட்டை

என்று சாதிச்சண்டை பாரத முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் அமைவதைக் கவிஞர் பாடுகின்றார்.

சூரியனின் ஒளிதேக்கி அடுப்பமைத்துச்
சுவையாகச் சமைப்பதற்குக் கருதும் நாளில்
வீரியம் சேர் தானியங்கள் விளையும் நாளில்
விண்சுற்றும் கோள்களையே மாற்றும் நாளில்
பேரியற்கை அனைத்தையுமே மனிதன் கொண்ட
பேராற்றலாய் அடக்க முனையும் நாளில்
ஊரில்வளர் சமயமதச் சண்டையெல்லாம்
உருவாக்கும் நாட்டில் முட்டுக்கட்டை

கணக்கறுக்க கம்யூட்டர் தேர்வுத் தாளைக்
கணக்காக நுணித்தறிய இயந்திரங்கள்
மணக்கவரும் கன்னியரின் மனத்தைக் கூட
வகுத்துரைக்க ஓர் கருவி மணந்த பின்னர்
உணவு முதல் உள்ள மனைப் பணியனைத்தும்
ஒன்றுவிடாமற் செய்ய ரோபோ என்ற
கணக்கற்ற சிந்தனைகள் பெருகும் நாட்டில்
கருத்தற்ற மதச்சண்டை முட்டுக்கட்டை

(கனிக்குவியல், பெரி. சிவனடியான் ப.123)

என்ற இந்தப்பாடல்களில் வளர்ந்துவரும் அறிவியல் வளர்ச்சியினை மதிப்பிடும் கவிஞர் மதச்சண்டை என்னும் பிற்போக்குத் தன்மையும் மறையாமல் வளருவதை முட்டுக்கட்டையாகக் காண்கிறார்.

அறிவியல் வளர்ச்சி, அறிவு வளர்ச்சி சமுதாயத்தில் ஏற்பட்டாலும் பொல்லாத சாதி, மத உணர்ச்சி வளர்ச்சியும் பெருகுவதைக் கவிஞரால் ஏற்க இயலவில்லை.

சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு நிலை காணப்படுகிறது. படித்தவர்கள், படிக்காதவர்கள், செல்வமுடையவர்கள், வறியவர்கள் இப்படிப் பற்பல அடுக்காய்க் காணப்படும் சமுதாய அடுக்குகளைக் கவிஞர் கண்டு அவற்றுக்குள் உள்ள இடைவெளிகளை நிரப்ப முயற்சி செய்கிறார்.

ஒரு கதைப்பாடல் போல தீபாவளி கொண்டாடப்படும் செய்தி தரப்படுகிறது.

அப்பன் மகனுக்குத் துணி,வெடி ஆசை
அம்மா அவளுக்கோ வடைசுட ஆசை
எப்போது வந்திடும் தீபாவளி என்றெண்ணி
ஏங்கியிருந்தவர்க்கு எல்லாமே ஆசைதான்

வேட்டி சட்டையில்லை மேலாடை ஒன்றில்லை
வேண்டுமட்டும் தின்ன வெங்காய வடையில்லை
ஊட்டி வளர்த்திடும் ஒற்றை மகனுக்கு
ஊரார்முன் வெடித்திட ஊசிப் பட்டாசில்லை

அங்கங்கும் கேட்டிடும் ஆயிரம் வெடிச்சத்தம்
ஆதாயமாய் வர அப்பனே சொல்கிறான்
இங்குச் சுட்டாலென்ன? எங்குச் சுட்டாலென்ன
எல்லாம் ஒரு சத்தமே, ஏண்டா அழுவுற

(பெரி. சிவனடியான் கவிதைகள்.ப.197)

என்ற பாடலில் தீபாவளி கொண்டாடாத சோகம் குப்பனின் மகனின் உள்ளத்தில் இருப்பதைக் காட்டுகிறார் கவிஞர். குப்பன் தன் மகனுக்குச் சொல்லும் சமாதானம் எல்லாருக்கும் சொல்லப்பட வேண்டிய சமாதானம் ஆகும். ஏழ்மை நிலைக்கு இரங்கும், மென்மை மனதுக்காரர் இக்கவிஞர் என்பதை இக்கவிதை காட்டுகின்றது.

ஏழ்மை, வறுமை பற்றிப் பல கவிதைகளில் அவர் பாடியுள்ளார். அவற்றில் சில பின்வருமாறு.

எட்டடுக்கு மாடி விட்டெறிந்த -ஒரு
எச்சில் இலைச்சுருள் கீழேவர
ஒட்டிய வயிற்றுடன் நின்றவனோ அதை
ஓடிப்பிடித்ததில் வெற்றி கண்டான்

எட்டிப் பிடித்ததில் வெற்றியன்றி-அந்த
எச்சில் இலைக்குள்ளே ஏதுமில்லை
விட்டெறிந்தானதை விரக்தியுடன்
வேகமாய் வந்ததொரு நாய் கவ்விற்று

எச்சில் இலையைப் பெற்ற நாய்க்கும் அதில் எதுவும் கிடைக்கவில்லை. இந்நிலையில் அதனை ஒரு மாடு உண்ண நினைத்துக் கிட்டே வர இரு விலங்குகளுக்கும் போராட்டம் நடைபெறுகிறது. இதனைப் போராட்டம் என்ற தலைப்பிலேயே

கவிதையாக வடித்துள்ளார் கவிஞர் பெரி. சிவனடியான். இக்கவிதை பின்வருமாறு முடிகின்றது.

எச்சில் இலைக்கொரு போராட்டம்-இதில்
எத்தனை உயிர்கள் நடமாட்டம்
மிச்சமென்ன இந்த வாழ்க்கையிலே என்றும்
மீளமுடியாப் போராட்டங்களே!

(பெரி. சிவனடியான் கவிதைகள், ப. 110)

இக்கவிதையில் உணவிற்காக உயிர்கள் படும்பாட்டைக் கவிஞர் மனம் கவலையுற்றுப் பாடியுள்ளார்.

உழைக்கும் மக்கள் வாழ்க்கை உயரமுடியாநிலை கண்டுக் கவிஞர் வருந்திப்பாடிய கவிதை பின்வருமாறு.

வயல் வெளியில் பாட்டாளி உழைத்துச் சாக
வருகின்ற பண்ணையார் வாரிச் செல்ல
இயலாதார் வாய்மூடி ஏங்கி நிற்க
இவர் வீட்டுப் பெண்கள் கண்ணீர் வடிக்க
உயர்கின்றார் முதலாளி உப்பில்லாமல்
உண்கின்றான் தொழிலாளி. உயிர்மூச்சின்றி
அயர்கின்றான் குடிசைக்குள் அதனால் கேட்டேன்
அவன் படைப்பில் அவனே ஏன் பேதம் வைத்தான்

(பெரி.சிவனடியான் கவிதைகள், ப.179)

என்ற கவிதையில் கடவுள் படைக்கும் படைப்பில் ஏன் உயர்வு தாழ்வு என்று கேட்கிறார் கவிஞர்.

மனிதர்கள் ஒவ்வொருவரும் வளமாக வாழவேண்டும் என்பது கவிஞரின் ஆசை.

உண்ணுதற்கு உணவும் நாளும்
உடுத்திட உடையும் சென்று
ஒண்டிடக் குடிலும் செத்தால்
உயிரிலாப் பிணத்தைத் தூக்கிக்
கொண்டுஇடு காடு சேர்த்துக்
கொளுத்திடக் காசும் ஏழை
உண்டெனும் உறுதியோடு
உலவுநாள் எந்தநாளே

(பெரி. சிவனடியான் கவிதைகள், ப. 102)

என்ற கவிதையில் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான அடிப்படை உரிமைகள், வாழ்வாதராங்கள் கிடைத்திடும் நாள் எந்நாளோ என்று கவிஞர் தேடுகின்றார்.

மேலும் தன்வாழ்வில் ஏற்பட்ட இடைஞ்சல்கள் தீர பழனிமலைக்கடவுளை அவர் வேண்டுகிறார். அவ்வேண்டுதல் ஒவ்வொரு மனிதருக்குமான வேண்டுதலாக உள்ளது. குறிப்பாக வெற்றி, உயர்வு, பொருளாதாரத்தில் தன்னிறைவு இவற்றை வேண்டி முருகனிடம் வேண்டுகோள் வைக்கிறார் கவிஞர் சிவனடியான்.

படுகின்ற பாடெலாம் பாட்டாக எழுதிஉன்
 பாதமலர் தன்னில் வைத்தேன்
பத்தாகி ஒன்றாகிப் பலனேதும் இலதாகிப்
 பாடுப நாளும் வைத்தாய்
கெடுதலறியாதவன் துயர்படுதல் ஏனென்று
 கெஞ்சியுனை நான் கேட்கின்றேன்
கிட்டவரும் செயலெல்லாம் எட்டிப் போகின்றதேன்
 கிட்டுகிற நாளு மென்றோ?
குடத்துவிளக்காகவே முடிந்துவிடல் நீதியோ
 குமுறுகிறேன் கேட்டகவிலையோ
குன்றிலுறு விளக்காக குளிர்நிலவின் ஒளியாகக்
 குவலயமே அறிவதென்றோ?
கடுகளவும் பிறர்நோகச் செய்யாத கவிஞன்என்
 கவலைகள் நீளலாமோ?
கந்தனே பழநிமலைக் கடவுளே சிவனடியான்
 களிப்படையச் செய்ய வருவாய்

(பெரி.சிவனடியான் கவிதைகள், ப.186)

என்ற இக்கவிதையில் தன்னை உட்படுத்திக் கவிஞர் கவலைகைளை பழனி முருகனிடம் எடுத்துரைக்கிறார். குடத்துவிளக்காக அவர் முடிந்துவிடக் கூடாது குன்றில் இட்ட விளக்காக குமரன்போல வரவேண்டும் என்பதற்காக பழனி மலை முருகனிடம் வேண்டுகோள் வைக்கிறார். பொருளாதாரத்தில் கவிஞருக்கு இருந்த நெருக்கடிகளின் சாயல் இவ்வடிகளில் தென்படுகின்றன. தமிழ்ச்சமுதாயத்தில் அனைவரும் தன்னிறைவு பெற்று வாழவேண்டும் என்ற கவிஞரின் ஆவல் இதன் வழியாக வெளிப்பட்டுள்ளது.

இவ்வாறு வறுமை துரத்தும் வாழ்க்கையிலிருந்து மீள அவர் கவிதை செய்கிறார். வேண்டுதல்களை இறைவனுக்குச் சமர்ப்பிக்கிறார்.

மக்கள் தொகைப் பெருக்கம் கவிஞரின் விமர்சனத்திற்கு அதிகமாக உள்ளாகியுள்ளது. இச்சிக்கல் பற்றி பல பாடல்களைப் பாடியுள்ளார் கவிஞர் பெரி. சிவனடியான்.

பின்வரும் நகைச்சுவை கலந்த நிகழ்ச்சிக் கவிதை இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மூத்தவள் முன்னே இளையவள் பின்னே
வலக்கையில் ஒன்று, இடக்கையில் ஒன்று
வந்து குதித்திட வயிற்றிலே ஒன்று
இந்த நிலையில் ஏறினாள் பேருந்தில்
பட்ட பாட்டைப் பார்த்த நடத்துநர்
அம்மா உங்கள் குழந்தையா அனைத்தும்
என்றொரு கேள்வியை இதமாய்க் கேட்டான்
ஏண்டா முண்டம் இப்படிக் கேட்கிறாய்
பாவி நீ இப்படிக் கேட்பாய் என்றே
பாதியை வீட்டிலே விட்டுநான் வந்தேன்
என்று கோபமாய் எரிந்து விழுந்தாள்

இவ்வாறு செல்லும் இந்நெடுங்கவிதையில் பிறந்த பிள்ளைகளுக்குப் பயணச்சீட்டு வாங்குவதில் சண்டை ஏற்பட்டு அது ஒருவாழியாய்த் தீர்வதற்கு முன்னால்

இந்த ஆர்ப்பாட்டத்தில் இடுப்பை வலித்தது
நடத்துநர் விசிலை அடித்ததும் ஓட்டுநர்
எடுத்தான் வண்டியை எங்கோ பறந்தது
வழியில் அவளுக்கு வலிமிகக் கூட
வண்டியை மருத்துவமனையாய் மாற்றினர்
நாரியர் அனைவரும் நர்சாய் மாறினர்
வேட்டியால் பஸ்ஸை வெகுவாய் மறைத்தனர்
பஸ்ஸினை நம்பிய பாவை அவளுக்குப்
பாரதம் வாழப் பாவையே பிறந்தாள்
இத்தகு நிலையில் இத்திருநாடு
எப்படிப் பிழைக்கும், எப்படி வாழும்
பஸ்ஸில் தியேட்டரில் படம் பார்த்திடுகையில்

உஸ்அப்பாவென ஒரு மகவு ஈனுதல்
வெட்கமாய் இல்லை? வீதியில் ஈனும்
விலங்கிற்கும் இவர்க்கும் வேறுபாடென்ன?
மகப்பேறென்ன மானம் கெட்டதா?

(பெரி. சிவனடியான். கனிக்குவியல்.ப.114)

என்ற இந்தப்பாடலில் கவிஞரின் கோபம் சொற்களில் வெளிப்பட்டுள்ளது. மகப்பேறு என்பதன் புனிதத்தை நிலை நாட்டுகிறது.

மற்றொரு கவிதையில் மக்கள்பெருக்கம் குறித்துக் கவலை கொள்கிறார் கவிஞர் பெரி. சிவனடியான்

உற்பத்தி செய்வது ஒன்றெனில் மக்கள்
உற்பத்தி பத்தாச்ச
நிற்கதி யாக்கநம் நிம்மதி குறைத்திடும்
நீளம் மக்கள்தொகை
உழைத்திடும் கரங்கள் ஓங்கிட நாட்டில்
உயருது தொழில்வளமும்
பிழைப்பவர் ஊதியம் பெருகியும்
வருமையைப் பெருக்கிடும் மக்கள் தொகை

(பெரி.சிவனடியான் கவிதைகள், ப.104)

இக்கவிதையில் இந்திய நாட்டின் தொழில் வளமும் செல்வவளமும் மக்கள் தொகைப் பெருக்கத்தால் குறைந்து வருகின்றன என்று கவிஞர் பாடுகின்றார்.

ஐந்து பெண்கள் பெற்ற பின்னும் நிறத்தவில்லையே!
ஆண்மகவுக்கு ஏங்கும் ஆசை அடங்கவில்லையே!
நைந்த பின்னும் குடும்பநலம் நாடவில்லையே!
நாடும் வீடும் வாழ வழிகள் தேடவில்லையே!

பெற்றுவிட்ட பெண்களை நீ பேண முடியுமா?
பெண்ணுக்கேற்ற வரனை உன்னால் தேட முடியுமா?
பற்றுப் பாசம் வைக்க ஒன்று பெற்றால் போதுமே!
பாடுபட்டு ஆணோ பெண்ணோ காத்தல் வாழுமே

(பெரி. சிவனடியான் கவிதைகள், ப.111)

இப்பாடலிலும் அதிகமாகப் பெண்பிள்ளைகளைப் பெற்றால் அப்பிள்ளைகளுக்கு மணம் செய்துப் பார்க்க இயலாது என்பதைக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு மக்கள் தொகைப் பெருக்கம் குறித்த கவிஞரின் கவலை பல பாடல்களில் வெளிப்பட்டுள்ளது.

பெண்களின் முன்னேற்றம் குறித்துப் பற்பலச் செய்திகளை அடுக்கி உரைக்கின்றார் கவிஞர் பெரி. சிவனடியான்.

தண்டமிழ் நாட்டுத் தமிழச்சியே- வளை
தாங்கிய மாதர் பரம்பரையே
கொண்ட கணவனை அன்றிமறு- தெய்வம்
கொள்ளாத கொள்கைக் குலக்கொடியே

ஆட்சி பீடம்வரை சென்றிடவா-அங்கே
ஆளும் முறையெல்லாம் தேர்ந்திடவா
வீட்டுக்கரசிகள் ஒன்று பட்டு- வாழ்வில்
வெற்றிக் கொடியினை நாட்டிடவா

(பெரி. சிவனடியான் கவிதைகள்,ப.99)

என்று பெண்களை முன்னேற்றப் பாதையில் செல்ல வழி காட்டுகிறார் கவிஞர் பெரி. சிவனடியான்.

மேலும் விதவைப் பெண்கள் வாழ்வில் பெறும் துன்பத்தைக் கண்டு வருத்தக்கவிதைகள் பலவற்றை அவர் படைத்துள்ளார்.

இருட்டறையில் எங்களையே தள்ளுமாறு
இவ்வுலகில் என்னதான் பிழையைச் செய்தோம்
திருட்டெதுவும் செய்தோமா சிறையில் தள்ளத்
தீங்கெதுவும் ஆண்களுக்குச் செய்ததுண்டா?
மருட்டிடுமிச் சமூகத்தார் விதவை என்று
மாய்த்திடவே எங்களை நினைத்திட்டாலும்
திருமுகத்தில் ஒளிசேர எழில்குலுங்கும்
சீரிளமைத் திறன் சிறிதும் செத்ததுண்டா?

எங்களைப் போல் வயதுள்ள நங்கை நல்லார்
இன்பமுடன் அவர்கணவன் மார்களோடு
கங்குல்நிறக் கூந்தலிலே முல்லை சூடிக்
கடலோரம் செல்வதை நாம் காணும்போது

பொங்குகிற காதலெனும் உணர்ச்சி வெள்ளம்
போய்ச்சேரக் கடலொன்றும் புவியில் இல்லை
திங்கள் முக அழகெல்லாம் கணவனோடு
செத்தொழிந்து போனதுவா சொல்வீர் கொஞ்சம்?

(பெரி.சிவனடியான் கவிதைகள்,ப.97)

என்ற கவிதையில் விதவையர் மறுமணம் புரிந்துகொள்ள சமுதாயம் ஒத்துக்கொள்ளாத நிலையைச் சாடுகிறார் கவிஞர்.

யாழறுந்தால் மற்றுமொரு நரம்பிங்குண்டு
நகைதேய்ந்தால் நாணணியும் உடையில் ஏதும்
பாழ்பட்டால் அதை நீக்கிப் புதிதாய்ப் பூணும்
பண்புண்டு பாலிதழின் இன்பம் ஈந்து
கூழ்வார்க்கும் மனைக்கிழத்தி இறந்தால் மற்ற
குமரிதனை ஆண்மணக்கும் கொள்கை உண்டு
வாழ்ந்தவொரு மணவாளன் மாண்டான் என்றால்
மறுமணத்தைப் பெண்ணேற்க வழிதான் இல்லை

(பெரி. சிவனடியான் கவிதைகள், ப.99)

மனைவி இழந்தால் மறுதாரம் செய்யக் கணவனுக்கு உதவிடும் சமுதாயம் பெண்ணினத்திற்கு ஏன் அவ்வுதவியைச் செய்ய மறுக்கிறது என்ற கேள்வி சமுதாயத்தின் மீது கவிஞர் கொண்ட கோவத்தின் விளைவாக வந்த கேள்வியாகும்.

இவ்வகையில் பெண்ணினத்தின் மீது மிகுந்த பற்று கொண்டு அவர் கவிதைகள் பலவற்றைப் புனைந்துள்ளார். அவர்கள் இல்லறம் நடத்தும் பாங்கையும் கவிஞர் பெரி. சிவனடியான் பல கவிதைகளில் படைத்துள்ளார்.

கணவனுக்கு உழைத்தல் கடவுள் தொண்டெனில்
மனைவியைக் காத்தலும் மாண்புறு தொண்டே
மக்களைப் பெற்று வளர்ப்பதும் தொண்டே
பெற்றதாய் தந்தையைப் பேணுதல் தொண்டே
மாமியைத் தாயாய் மதித்திடல் தொண்டே
மருகியை மகளாய் நடத்தலும் தொண்டே
சுற்றத்தாரின் சூழலும் தொண்டே
இல்லற வாழ்க்கையில் எல்லாம் தொண்டே

தொண்டின் வடிவம் தூய்த் தமிழ்ப்பெண்கள்
பிறந்ததும் அவர்கள் வெற்றோர்க்கு உழைக்கின்றார்
மணந்ததும் கணவன் மனையில் உழைக்கின்றார்
பெற்றதும் தங்கள் பிள்ளைகட்கு உழைக்கிறார்
வயது முதிர்ந்ததும் மற்றவர்க் குழைக்கின்றார்
என்றும் உழைத்திடும் இப்பெண்ணினத்தின்
தன்மையால் வள்ளுவர் சாற்றினார் தெய்வமாய்
வீட்டின் விளக்காய் விளம்பினார் பாவேந்தர்
பெண்ணின் பெருமையைப் பேசினார் திரு,வி.க
நாட்டின் கண்ணாய் நவின்றனர் மேலோர்.

(பெரி.சிவனடியான்.கனிக்குவியல்,ப.76)

என்ற கவிதையில் பெண்ணினத்தின் பெருமையை வாயாரப் பாராட்டி உரைக்கின்றார் கவிஞர்.

அதே நேரத்தில் மாமியார் என்ற பாத்திரத்தின் இயல்பினை ஒரு கவிதைக்குள் காட்டுகிறார் கவிஞர்.

ஆசையோடும் அன்போடும் வளர்த்த மைந்தன்
அடுத்தவளின் கட்டிற்குள் வீழும்போது
பாசமுள்ள தாயுள்ளம் பொறுப்பதில்லை
பழகுமவள் மருமகளாய்த் தெரிவதில்லை
காசுபணம் கொண்டதனால் மகனைச் சேர்ந்துக்
கைக்குள்ளே போட்டுவிட்டாள் என்ன செய்வேன்
கூசுதடி என்நாக்கு மேலும் கூறக்
கூறுகெட்டுப் போயிவளைக் கொண்டேன்
என்பாள்

(பெரி.சிவனடியான், கனிக்குவியல்,ப.89)

இவ்வாறு மகளிர் நலம் பாடுகிற கவிஞராகப் பெரி. சிவனடியான் விளங்குகிறார்.

மக்கள் சமுதாயம் முதல் தனிமனித வாழ்வு வரை மதிப்பிட்டுப் பாடும் கவிஞராகப் பெரி. சிவனடியான் விளங்குகின்றார்.

இச்சமுதாயக் கருத்துகள் வழியாக இவர் சிந்தனைக்கவிஞர் என்று போற்றப்பெறுவது பொருத்தமுடையதாக உள்ளது.

காவியமும் நாடகமும்

கவிஞர் பெரி. சிவனடியான் தனித்தனிக் கவிதைகள் பலவற்றை எழுதியவர். கவியரங்குகளில் தரப்படும் பொருள் பற்றி நெடுங்கவிதைகள் எழுதியவர். என்றாலும் அவரின் தனிப் பெரும் படைப்புகளாக அவரின் காவியமான வான்மதி என்பதையும், நாடகமான அவளுக்காக என்பதையும் குறிப்பிடலாம்.

வான்மதி என்ற காவியம் மென்மையான கவிதைகளால் புனையப்பெற்ற பாவியம். அவளுக்காக நாடகம் ஆரம்ப காலத்தில் அவர் படைத்த உரைநடைப் படைப்பு. வான்மதி சோகமான முடிவினைக் கொண்டது. அவளுக்காக சோகமான முடிவை நோக்கிச் சென்றாலும் நாடகத் தலைமை மாந்தர்களை இணைத்து வெற்றி பெறுகிறது. இவ்விரு படைப்புகளின் வழி இக்கவிஞரின் திறம் வெளிப்பட்டு நிற்கிறது.

வான்மதி காவிய நலன்

வான்மதி காவியத்தின் முன்பகுதியில் கவிஞர் தரும் முன்னுரைச் செய்தி பின்வருமாறு.

கதைத்தலைவன் இனியவனின் கரங்களுக்கு எட்டாத வான்மதி இப்போது உங்கள் கரங்களுக்கு எட்டி ஒளி சிந்துவது எனக்குப் பெருமகிழ்வேற்படுத்துகிறது. வான்மதியைப் படிக்கத் தொடங்கும் நீங்கள் கொஞ்சம் வாய்விட்டுப் படியுங்கள். கவிதையைப் படிப்பதற்கு இது பொதுவான செய்தி. அது சுவையை இரட்டிப்பாக்கும். அப்படி இவ்வான்மதியைப் படித்துச் சுவைத்தபின் எனக்கொருவரி ஒருவார்த்தை எழுதுங்கள். அது எனக்கு நிறைவேற்படுத்தும். நன்றியுடையவனாக இருப்பேன் என்பதே கவிஞர் தரும் முன்னுரை.

வான்மதி ஒசை நயத்தால் சிறந்த காவியம் என்பதே மேற்பகுதியின் சாரம். இக்குறுங்காவியத்தின் உறுப்பினர்கள்

இனியவன், செல்வி, அன்பன், நிறைமதி, சோலை ஆகியோர் ஆவர்.இக்காவியம் பதினைந்து இயல்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு இயலுக்கும் ஒவ்வோரு இடத்தின் பெயர் கொடுக்கப்பெற்றுள்ளது. அவை பின்வருமாறு. 1. தெருவில், 2. பள்ளியில், 3.கல்லூரியில், 4. சோலையில். 5. ஆற்றங்கலையில், 6. மடலில். 7. சங்கத்தில், 8. கூட்டத்தில், 9. பொதுவாழ்வில், 10. இல்லத்தில், 11. கண்ணீரில், 12. மன்றலில், 13. ஆலையில், 14. சென்னையில், 15. தெருவில்

இவ்வாறு பற்பல இடங்களில் நடைபெற்ற நிகழ்வுகளின் கவிக்கோவை வான்மதி என்ற காவியம்.

காவியத்தின் கதை

இனியவனும் செல்வியும் இளமைக் காலம் முதலே ஒன்றாகக் கலந்து பழகியவர்கள். அவர்கள் சிறுவயதிலேயே சிற்றில் கட்டி விளையாடியவர்கள். அன்னையின் அனுமதியின் பேரிலேயே செல்வி இனியவனுடன் விளையாடினாள். அவர்களின் சிற்றில் கட்டிய இல்லறத்தில் விருந்தாய் நண்பனும் கலந்து கொண்டான். இனிதே இல்லறம் சிறந்தது.

நாள்கள் நகர இருவரும் கல்லூரிக்குப் படிக்கச்சென்றனர். அங்கு அவள் தமிழ் இலக்கியம் படித்தாள். இனியன் வரலாறு படித்தான். இருவரின் நட்பும் பெருகியது. காதலாய்க் கனிந்தது.

கல்லூரிப் படிப்பு முடியும் தறுவாயில் கோவையில் ஆலைப்பணிக்குச் சென்றான் இனியன். வருத்தத்துடன் அனுப்பி வைத்தாள் செல்வி.

செல்வி கல்வி கற்று தமிழ் ஆசிரியப் பணியை வேறோரு ஊரில் பெற்றாள். அங்குள்ள மாதர் சங்கத்தில் அவள் மகிழ்வுடன் செயல்பட்டாள். நல்ல வீறு மிக்க உரை ஆற்றினாள் . பெண்குலம் தழைக்கப் பல பணிகள் செய்தாள்.

செல்வியைப் பெண் கேட்டு பெருஞ்செல்வக் குடும்பம் ஒன்று வந்தது. தாயும் தன் மகள் காதல் அறியமால் ஒப்புதல் தரந்துவிடுகிறாள். இதனை அறிந்துத் தாய் சொல்லை மீறவும் முடியாமல் காதலை வெளிப்படுத்தவும் முடியாமல் கலங்கினாள் செல்வி.

திருமண நாளும் நெருங்கியது. என்ன செய்வது என்று ஏங்கினாள் செல்வி. அவளின் தோழி நிறைமதி ஓடிவந்து உதவினாள். திருமண நாளன்று செல்விக்குரிய அலங்காரங்களைத் தான் செய்து கொண்டாள். நிறைமதியாக அவளை மாற்றி இனியவன் பணியாற்றுவதாக நம்பும் ஊரான கோவை நகர் செல்ல வழியனுப்பினாள்.

திருமண வேளையின்போது மணமகளுக்குப் பதிலாக நிறைமதி நிற்பதை அறிந்து செல்வியின் காதலை உணர்ந்து மணமகன் வீட்டார் மணம் முடிக்காது திரும்பினார்.

கோவை சென்ற செல்வி இனியனைத் தேடினாள். அவனோ செல்வி மணம் செய்வதை அறிந்து ஊர் வந்துப் பார்த்தான். திருமணத்தின் முதல் நாள் இரவு நடைபெற்ற சீர் விழாவைக் கண்டு செல்வி என்னை மறந்தாள் என முடிவெடுத்து கால் நடக்கும் திசையெல்லாம் திரிந்தான்.

கோவை சென்ற செல்வி அவன் பணியாற்றிய ஆலையில் இனியனைக் காணாமல் துயரமுற்றாள். அவன் சென்னை சென்றதாக அறிந்து அங்கும் சென்று தேடினாள். ஆனால் செல்வியின் நினைவாகச் சென்ற இனியன் சென்னை மேற்கு வங்காளதேசம் சென்றான். அவன் வான்மதியில் செல்வியின் உருவம் கண்டு மகிழ்ந்தான்.

இனியனின் இனிய வரவிற்காக கன்னிமனம் மாறாமல் காத்திருக்கிறாள் செல்வி.

இவ்வாறு சோக இழை ததும்பும் காவியமாக வான்மதியைப் படைத்திருக்கிறார் கவிஞர் சிவனடியான்.

கவியழகு

இக்காவியம் வெள்ளப்பெருக்கில் தொடங்குகின்றது. பண்டைக் காவியங்களில் ஆற்றுவளம் கூறும் பகுதி அமைவதைப்போல இப்பகுதி அமைக்கப்பெற்றுள்ளது.

> தடமெல்லாம் மரங்கள் சாலைச்
> சரிவெலாம் உடைப்பு மக்கள்
> உடம்பெலாம் குளிர் நடுக்கம்

உளமெலாம் தீயின் பாய்ச்சல்
இடமெலாம் குளங்கள் அங்கே
இறைச்சலோ தவளைக் கூச்சல்
நடக்கவே முடியாவாறு
நல்ல அவ்வூரே தீவு

(பெரி. சிவனடியான், வான்மதி.ப.23)

என்று வெள்ளப் பெருக்கைக் கவிஞர் பாடுகின்றார். வெள்ளத்தின் ஓசைநயம் இக்கவிதைக்குள் பாய்ந்துவருவதை உரக்கப் படித்தால் தெரிந்து கொள்ளலாம்.

ஆறு பற்றிய விவரிப்பும் கவியழகு மிக்கதாகக் கவிஞர் கைவண்ணத்தில் விளங்குகின்றது.

ஆற்றுநீர்ச் சலசலப்பும்
அதுவரும் அழகும் காதல்
ஊற்றினை மிகுக்கும் ஆங்கே
உலவிடும் காதலர்க்கு
மாற்றமே காதற்போரில்
மலர்ந்திடில் அவர்களை வாழ்வைக்
கூற்றமாய் வந்தணைத்தும்
கொடுங்கடல் கூட்டிச் செல்லும்

(பெரி. சிவனடியான், வான்மதி, ப.43)

காதலர் வாழ்வில் தோல்வி ஏற்பட்டால் கடல் கூட்டிச் செல்லும் நிலையை ஆற்றின் மேல் வைத்துக் கவிஞர் பாடுகின்றார்.

இனியனும், செல்வியும் விளையாடிய சிற்றில் பருவத்தைப் பின்வரும் கவியடிகள் காட்டுகின்றன.

காலிலே மண்குவித்து
கட்டினான் நொடிக்குள் வீடு
கோலினால் வேலி கட்டி
கொல்லையை அமைத்தான். அங்கே
பாலினைப் பழிக்கும் பன்னீர்ப்
பூவையே பதியம் போட்டான்
தாலியை ஓட்டில் செய்து
தரித்தனன் செல்விக்கு ஆங்கே

(பெரி. சிவனடியான், வான்மதி.ப. 26)

தமிழரின் பண்பாடான தாலி பற்றிய செய்தி இங்குத் தரப்பட்டிருப்பது குறிக்கத்தக்கது.

காவியத்திற்கு கடிதப் போக்குவரத்தும் நடைபெறுகிறது. இனியன் கோவையில் இருந்து பற்பல சொல்லிக் கடிதம் எழுதுகிறான். அதற்கு இருவரிகளில் குறள் போல பதில் தருகிறாள் செல்வி

.. பெட்டிக்
கிடையினில் கிடந்த அச்சில்
தன்பெயர் பொறித்த வெள்ளைத்
தாளினை எடுத்தாள். பேனா
வன்மையைக் காட்ட வந்தாள்
வார்த்தை பாவேந்தர் தந்தார்
என்ன நான் எழுத அன்பே
இருக்கிறேன் சாகவில்லை

(பெரி. சிவனடியான், வான்மதி,ப.49)

இக்கடிதத்தில் சுருக்கமும் அதே நேரத்தில் பாவேந்தர் பாரதிதாசனின் சாயலும் உள்ளதைக் காணமுடிகின்றது.

தாயன்பு பற்றிச் செல்வி ஓரிடத்தில் பேசுகிறாள். அப்போது தாயன்பு பற்றிய செய்திகளைக் கவிதையாக்கித் தருகிறார் கவிஞர் பெரி. சிவனடியான். கவிஞருக்குத் தாய்ப்பாசம் அதிகம். அதனை இக்காவியத்தில் இந்நிகழ்வின் வழியும் வெளிப்படுத்தியுள்ளார்.

உண்டிட உணவுமின்றி
உடுத்திடத் துணியுமின்றி
ஒண்டிடக் குடிலுமின்றி
உழைத்திட வழியுமின்றி
மண்கலம் ஏந்திப் பிச்சை
வாங்குவாள் கூடப் பெற்ற
கண்மணி அனைய சேயைக்
காவாது விட்டதில்லை

(பெரி. சிவனடியான், வான்மதி,ப.51)

என்ற பாடலில் தாயின் பாசத்தை விவரிக்கிறார் கவிஞர்.

காவியத்தில் கடிதம், பேச்சுரை ஆகியனவும் கலந்திருக்கப் படைத்திருப்பது உத்திகள் பல கலந்த படைப்பாக வான்மதியைக் காட்டுகின்றது.

செல்வியின் வீட்டிற்கு மணம் பேச மாப்பிள்ளை வீட்டார் வருகின்றனர். அவர்கள் மாட்டுவண்டியில் வருகின்றனர். அதனைக் கவிஞர் பின்வருமாறு கவியழகுபட பாடுகின்றார்.

முகிலினைக் கொம்பு நோக்க
முகத்தினை முன்பின் ஆட்டி
திகில் தரும் திமிலுயர்த்திச்
சிறுமணி சலங்கையாட்டிப்
புகையெனப் பறக்கும் சோடி
பூரணிக் காளை பூட்டி
நகைப்பொலி யோடோர் வண்டி
நின்றது செல்வி இல்முன்

(பெரி.சிவனடியான், வான்மதி,ப. 67)

என்ற இக்கவிதையில் காளைகள் அசைந்து இழுத்துவரும் வண்டியின் வேகம், தாளம் ஆகியன காட்டப்பெற்றுள்ளன.

தாலி என்பது தமிழரின் அடையாளம். அதனை மண் ஓட்டில் செய்து இளம் வயதில் செல்விக்கு அணிவித்தான் இனியன். அன்றே அவர்கள் மணம் பதிவாகிவிட்டது. ஆனால் செல்விக்கு மற்றொரு ஆடவனுடன் திருமணம் என்றபோது தாலி தேளால் ஆனதாகப் படுகிறது செல்விக்கு.

தேளினைப் பிடித்துத் தாலி
செய்கிறீர் அரவமாலை
தோளினில் சூட்டுகின்றீர்
சொல்கிறேன் ஏற்க மாட்டேன்

(பெரி. சிவனடியான், வான்மதி, ப. 78)

இதில் செல்வியின் மணமாலை அவளுக்கு விருப்பமில்லாக் கராணத்தால் பாம்பால் செய்யப்பட்டது. தாலி தேளால் செய்யப்பட்டது என்று குறிக்கிறார் கவிஞர்.

பயில்தொறும் நூல்நயம் போல நல்லவர் நட்பு அமையும் என்பார் வள்ளுவர். அவரின் உவமையை அப்படியே எடுத்துக்கொண்டுக் கவிஞர் புனையும் கவிதை பின்வருமாறு.

நூல்வழி பெறுமின்பம் போல்
நினைநினைந்தடைவேன் இன்பம்

(பெரி. சிவனடியான், வான்மதி, ப.92)

என்ற கவியடிகளில் செல்வியினால் கிடைக்கும் இன்பத்தின் தன்மை குறிக்கப்பெற்றுள்ளது. செல்வியை இனியன் உடலால் அடைய இயலாது. உள்ளத்தால் அடையலாம்.நூல் ஒன்றால் பெறும் இன்பமும் உள்ளத்தால் அடையத்தக்கது. ஆனால் உடலால் அடைய இயலாதது. எனவே நூல்வழி பெறும் இன்பம்போல செல்வியின்பால் உள்ளத்தால் இன்பத்தைப் பெற இயலும் என்று இனியன் கருதுகிறான்.

இவ்வாறு எளிமையான சொற்களால் ஆழமான கவித்துவக் கவிதைகளைப் படைத்து நிற்கிறார் கவிஞர் பெரி. சிவனடியான்.

பாத்திரப்படைப்பு

இக்காவியத்தின் தலைமைப் பாத்திரங்கள் இனியனும், செல்வியும் ஆவர். இவர்களின் பாத்திரப்படைப்பினை செம்மையுடன் படைத்துள்ளார் கவிஞர் பெரி. சிவனடியான்.

இனியனின் பாத்திரப்படைப்பு

இனியன் என்ற பெயரே இனிப்புடையது. இனியன் தோற்றத்திலும், செயலிலும், அறிவிலும், சொல்லிலும், காதலிலும் இனியனாகப் படைக்கப்பெற்றிருக்கிறான்.

இனியனின் இயல்புகளைப் பற்றி
இனியனோ சிறுவனாக
இருப்பினும் இனிய சொல்லன்
கனிந்தவாய்ச் சிரிப்பில் மிக்கான்
களையொளிர் முகத்தைப் பெற்றான்
பனிதரு வெள்ளை முத்துப்
பல்லினைத் தெரியக் காட்டித்
தனியனாய் அங்கு வந்தான்
தனக்கொரு துணையாள் இல்லை

(பெரி'.சிவனடியான், வான்மதி, ப.25)

என்று இனியனின் இயல்புகளைக் கவிஞர் பாடுகின்றார்.

இனியன் செல்வியைப் பிரிந்துக் கோவைக்குப் பணிபுரியச் செல்கிறான் அப்போது அவனின் நிலையைப் பின்வரும் கவிதை காட்டுகின்றது.

செல்வியே கேட்பாய் நாளைச்
செல்கிறேன் கோவை உன்பாற்
சொல்லவே வந்தேன் அங்கே
தொழிலக ஆலை வேலை
நல்லவர் தலைமையின் கீழ்
நான் அடைந்துள்ளேன் ஆனால்
சொல் உனக்கு அடிமையான
சுகமதில் வருமா செல்வி

(பெரி.சிவனடியான், வான்மதி,ப.43)

என்று கடமை பெரிதெனச் செல்லும் கடமை வீரனாகவும், காதல் பெரிதெனக் காட்டும் காதல் தோழனாகவும் அவன் விளங்குகிறான்.

ஆலையில் அவன் தொழிலாளர் நலன் பேணுகின்றான். தொழிலாளர் அமைப்பினை ஆலையில் நிறுவி அதன் தலைமை பெற்றான்.

உழைத்திட உறுதி கொள்வோம்
உழைத்திடும் உழைப்பிற் கேற்பப்
பிழையிலா வகையிற் கூலி
பெற்றிட விதிகள் செய்வோம்
தழைத்திட நமது வாழ்வு
சங்கங்கள் மேலும் காண்போம்
விழைவதில் வெற்றி கொள்ள
வெஞ்சமர் வரினும் அஞ்சோம்

(பெரி. சிவனடியான், வான்மதி.ப. 56)

என்ற கவிதையில் இனியனின் புரட்சிகர உள்ளம் தெரியவருகிறது.

தான் காதலித்த காதலி செல்வி மற்றொருவன் கைபிடித்தநிலையை எண்ணிக் கவலையுற்றுச் செய்வதறியாது திகைக்கிறான் இனியன்.

மறப்பளா செல்வி அன்றி
மறுத்தவள் தாயே தானா
பிறவியில் ஒருவர் என்றாள்
பிரிந்திடில் இறப்பென்றாளே
உறவெலாம் கண்டால் தானா
உலகமே பொய்மை தானா
கறந்தபால் மடியேறாது
கடிமணம் இனிமாறாது

(பெரி. சிவனடியான், வான்மதி, ப.91)

என்று செல்வி தன்னை மறந்தாள் என்ற செய்தியை இனியனின் மனம் ஏற்க மறுக்கிறது. இருப்பினும் காலத்தின் கோலமாகக் கருதி செல்வி மணம் கொண்டாள் எனக் கொண்டு அவன் தன் ஊர் விட்டு, மாநிலம் விட்டுப் பிரிகின்றான். இனியனின் வாழ்வு கசப்புக்கு உள்ளாகிறது.

செல்வி

இக்காவியத்தின் மற்றொரு தலைமைப் பாத்திரம் செல்வி ஆவாள். இவள் செல்வி என்ற நிலைக்கு ஏற்ப நிறைவுவரையிலும் திருமணமே புரியாமல் காதலனுக்காகக் காத்திருக்கிறாள். இவள் தமிழ் பயின்றவள். இவள் ஒரு பள்ளியில் ஆசிரியராக ஆகிறாள். இவள் சமுதாயச் செயல்பாடுகளில் ஈடுபடுகிறாள். இவள் மாதர் சங்கமொன்றில் இணைந்து களப்பணி ஆற்றுகிறாள்.

வாரிக் குப்பையெல்லாம்
வண்டியிற் சேர்ப்பாள் கண்ட
பேரெலாம் உடன் இணைந்தே
பிழையறக் கடமை செய்வார்
காரிகை சேவை எண்ணிக்
கைகுலுக் கிடுவார் மக்கள்
ஊருளார் உள்ளத் தெல்லாம்
ஒளியென மிளிர்ந்தாள் செல்வி

(பெரி.சிவனடியான், வான்மதி, ப.60)

இவ்வாறு சமுதாயப் பணிகள் ஆற்றுவதில் செல்வி முன்நிற்கிறாள். இவளும் புரட்சிச் சிந்தனைகள் உடையவள்.

வரதட்சணை ஒழியவேண்டும், பெண்கள் வாழ்வு மலரவேண்டும் என்று அவள் போராடுகிறாள்.

அரசினர் அறிக்கை வந்தால்
அன்றன்றும் விரித்துரைப்பாள்
விரும்பிடும் வகையில் வேளாண்
செய்தியும் விளக்கிச் சொல்வாள்
வரும்படி எண்ணி ஆண்கள்
மணத்தலைத் தகர்ப்போம் என்பாள்
கரும்பெனக் கனியும் வாழ்வைக்
காலமும் காப்போம் என்பாள்

(பெரி. சிவனடியான், வான்மதி,ப.61)

என்ற கவிதையில் வரதட்சணை தகர்க்கப் புறப்பட்ட புயலாக விளங்குகிறாள் செல்வி.

தாயன்பு பற்றி அவள் கூட்டமொன்றில் பேசிய பேச்சு கேட்டார் மனங்களைப் பிணித்தது.

தாயினை மறந்தே ஈசன்
தாளினைப் பற்றி என்ன
தாயினும் மேலாம் தெய்வம்
தரணியில் மெய்யாய் இல்லை
கோயிலில் உள்ள தெய்வம்
கும்பிடக் குறைகள் தீர்க்கும்
தாயெனும் இறையோ கையில்
தாங்கியே நம்மைக் காக்கும்

(பெரி. சிவனடியான், வான்மதி,ப.51)

என்று தாயன்பின் தன்மையைப் பாராட்டுகிறாள் செல்வி.

காதலன் இனியனை அடைய அவள் பல முயற்சிகள் மேற்கொண்டாலும் அவை ஈடேறவில்லை. அவளின் நிலையைக் கவிஞர் பின்வருமாறு காட்டுகிறார்.

தலைவனை இழந்தாள் தோழி
தண்ணளி நிழலில் வாழ்ந்தாள்
குலைந்ததன் காதல் வாழ்வைக்
குளிர்மதி அன்பாய்க் கொண்டாள்

அலைந்திடும் மனம் அடக்க
அவளொரு பணிமேற்கொண்டாள்
சிலைநிகர் செல்வி நாளும்
தேய்கிறாள் வாழவில்லை

(பெரி.சிவனடியான், வான்மதி, ப.103)

என்ற கவிதையில் செல்வி திருமணமாகாமல் கன்னியாகவே வாழும் நிலையைப் பாடுகிறார் கவிஞர்.

நிறைமதி

இக்காவியத்தின் மிக முக்கியமான திருப்புமுனைப் பாத்திரம் நிறைமதி ஆவாள். இவள் செல்வியின் தோழி ஆவாள். இவளின் ஆதரவால் செல்விக்குப் பணி கிடைக்கிறது. இனியனைச் செல்வி அடையாதபோது, இவள் அவளுக்குப் பாதுகாவலாக விளங்கினாள். மேலும் செல்வியின் காதலை மதித்துத் திருமண நாளன்று செல்வியின் உடைகளைத் தான் அணிந்து செல்வியைக் கோவை போக வைக்க வழிகண்டாள். மணப்பெண் கோலத்தை விரும்பி ஏற்றாள். தான் மணப்பெண் அல்ல என்பதை அனைவரும் அறிந்தபோது கலங்காது வலிமையாய் நின்ற நிறைமதி இவள்.

மன்றலில் நான் மணக்க
மணக்கோலம் இல்லையம்மா
என்னரும் தோழி வாழ்வை
இனித்திடச் செய்யக் காக்கத்
தன்னலம் கருதிடாமல்
தாங்கிய வேடம் என்றாள்

(பெரி. சிவனடியான், வான்மதிப. 93)

என்ற இக்கவிதையில் மணப்பெண் கோலத்தை மணவிழாவிற்காக எடுக்காமல் தன் தோழிக்காக எடுத்த நிலையை நிறைமதி குறிப்பிடுகிறாள். யாரும் செய்ய முடியாச் செயலைச் செய்து நிறைமதி காவியத்தில் நிலையான இடம் பிடிக்கிறாள்.

இக்காவியத்தில் செல்வியின் தாய், செல்வியை மணக்க வந்த மணமகன், இனியனின் நண்பன், நண்பர்கள் எனப் பல சிறு பாத்திரங்கள் இடம்பெற்றுள்ளன. இருப்பினும் மேற்காட்டிய

மூன்று பாத்திரங்கள் இக்காவியத்தின் சிறந்த பாத்திரங்களாகக் கருதத்தக்கன.

இவ்வாறு வான்மதி காவியம் பாத்திரப்படைப்பாலும் கவிநலத்தாலும் சிறந்து விளங்கி என்றும் பெரி. சிவனடியான் கவிச்சிறப்பை வெளியுலகிற்குக் காட்டி நிற்கிறது.

அவளுக்காக நாடகம்

கவிஞர் பெரி. சிவனடியான் அவர்களின் தொடக்க கால படைப்பாக விளங்குவது அவளுக்காக நாடகம் ஆகும். இந்நாடகத்தின் கதாபாத்திரமான வஸந்தா ஒரு புதிரான பாத்திரம் ஆகும். பாண்டியனைக் காதலிக்கும் அவள் திருமணத்திற்கு முன்பே தன்னை அவனுக்கு அர்ப்பணிக்கிறாள். இதன் காணரமாக குழந்தை உருவாகிவிடுகிறது. ஆனால் பாண்டியனை வஸந்தா திருமணம் செய்யும் நிலை ஏற்படவில்லை.

மாறாக வஸந்தா மூர்த்தியைத் திருமணம் செய்ய வேண்டிய நிலைக்கு ஆளாகுகிறாள். எட்டுமாதத்தில் குழந்தை பிறந்து விடுகிறது. இதன் காரணமாக மூர்த்திக்கு இது தன் குழந்தை இல்லை என்பது தெரியவருகிறது. இருப்பினும் அதனையும் ஏற்றுக்கொண்டு வஸந்தாவை எந்தத் துன்பத்திற்கும் ஆளாக்காமல் நிறைவில் பாண்டியனோடு இணைக்க மூர்த்தி முயலுகிறான். இந்நிகழ்வு நாடகத்தைப் படிப்பவர்களால், பார்ப்பவர்களால் ஏற்கப் படுமா என்ற ஐயப்பாடு நாடக ஆசிரியருக்கு இருந்துள்ளது. இது குறித்து அவர் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

ஆனால் மனிதராகப் பிறந்த ஆணும், பெண்ணும் முழுக்க முழுக்கத் தவறு என்று தெரிந்தும் கூடச் சில வேளைகளில் தவறி விடுகிறார்கள். தவற நேர்கிறது. தவறவே கூடாது என்கிறது ஒழுக்க உலகம், தவறிவிட்டால் கழுவாய் என்ன என்று கேட்கிறது. வாழ்வுலகம், வையமுள்ள வரையும் மாறாத இப்பிரச்சனையை எப்படி விடுவிப்பது? விடுவிக்கிறாள் ஒரு பெண். தவறிலும் நன்மை காணத் தவிக்கிறாள் ஒரு பெண். தவறிலும் நன்மை காணத் தவிக்கிறாள் அவள். எவரும் ஏற்க முடியாத மாபெரும் பிழையை இதயத் தூய்மையோடு உணர்ந்து, நேர்மையுடன் வாழ்ந்துவிடத் துடிக்கிறாள் - துவள்கிறாள். மனந்திறந்து கூறி

மன்றாடுகிறாள். ஆனால் இரங்காத இவ்வுலகம் இழைத்த தவறினும் இமாலயத் தவறு செய்யத் தூண்டுகிறது. துன்புறுத்துகிறது. சிறுமையால் சித்ரவதை செய்கிறது. மாறாத மங்கையோ இம் மனப்புரட்சியில் வாழ்வுப் போரில் மாலை சூடுகிறாள் (பெரி. சிவனடியான், அவளுக்காக, ப. 8) இம்முன்னுரைப்பகுதி ஒரு பெண்ணிற்கு ஏற்பட்ட இன்னலை அவள் எதிர் கொண்ட நிலையை மறைமுகமாகச் சொல்லிப் புரியவைக்கிறது.

இவ்வகையில் ஒரு முரண்பாடான நடப்பை முன்வைத்து எழுதப்பெற்றது இந்நாடகம்.

நாடகத்தின் கதைச் சுருக்கம்

மாணிக்கம் பிள்ளை செல்வந்தர். நாட்டியத்தில் ஈடுபாடு கொண்டவர். அவருக்கு மலேசியா நாட்டில் பல சொத்துகள் உள்ளன. அவற்றை நிர்வகித்து வந்தவர் சுந்தரம் பிள்ளை. சுந்தரம் பிள்ளை மலேசியாவை விட்டு வயதான நிலையில் இந்தியா திரும்புகிறார். அவருக்குப் பார்வதி என்ற மனைவியும் பாண்டியன் என்ற மகனும், கலையரசி என்ற மகளும் இருக்கின்றனர்.

இவர்களைத் தன் மக்களாக எண்ணி மாணிக்கம் பிள்ளை வளர்த்து வந்தார். அவர் சுந்தரம் பிள்ளையையும் பாதுகாத்து வந்தார். சுந்தரம் பிள்ளை வயது மூப்பு காரணமாக மரணமடைகிறார். அவருக்கு விடை கொடுத்துப் பாண்டியனையும் கலையரசியையும் தன் மக்களாக வரித்துக்கொள்கிறார் மாணிக்கம் பிள்ளை.

இதற்கிடையில் இந்தியாவில் மாணிக்கம் பிள்ளையின் சொத்துக்களைக் கவனித்துவரும் வேலாயுதத்திற்குப் பாண்டியனை அவர் வளர்ப்பு மகனாக ஏற்றது பிடிக்கவில்லை. இதன் காரணமாக பாண்டியனை அவன் குடும்பத்தை மாணிக்கம் பிள்ளையின் வீட்டை விட்டு விரட்ட எண்ணுகிறார்.

இதற்கு முதல் கட்டமாக மலேசியாவில் உள்ள செல்வங்களைப் பராமரிக்க, சொத்துக்களைக் காக்க, சொத்துக்கள் மீதான வழக்குகளை நடத்த பாண்டியனை மலேசியாவிற்கு அனுப்பச் சொல்லி வேலாயுதம் மாணிக்கம் பிள்ளைக்கு ஆலோசனை வழங்குகிறார்.

வேலாயுதத்திற்கு வஸந்தா என்ற மகள் உண்டு. அவள் பாண்டியனோடு இளம் வயதுமுதலே நெருங்கிப் பழகி வருபவள். பாண்டியனை மலேசியாவிற்கு அனுப்புவதன் வாயிலாக வஸந்தாவிடமிருந்துப் பாண்டியனைப் பிரித்துவிட இயலும். மேலும் இந்தியச் சொத்துகள் அனைத்தும் தன் பராமரிப்பில் வந்துவிடும் என்று திட்டமிட்டார் வேலாயுதம்.

பாண்டியன் மலேசியா சென்றுப் பல சீர்திருத்தங்கள் செய்தான். வழக்குகளைப் புதிய வழக்கறிஞரிடம் தந்தான். அப்புது வழக்கறிஞர் இளைஞர். இந்தியாவைப் பூர்வ குடியாகக் கொண்டவர். அவரின் பெயர் ஆனந்த் என்பதாகும்.

வழக்கறிஞர் ஆனந்தின் உதவியால் மலேசியாவில் உள்ள மாணிக்கம் பிள்ளைச் சொத்துகள் அனைத்தும் பாண்டியனால் காப்பாற்றப்பெறுகின்றன. இதற்கிடையில் வஸந்தாவிற்குத் திருமண ஏற்பாடுகளைச் செய்தார் வேலாயுதம். மூர்த்தி என்ற மாப்பிள்ளையைத் தன் மகளுக்குக் கட்டிவைத்தார் வேலாயுதம்.

வஸந்தா தன் நிலையைச் சொல்லி பாண்டியனின் உறவால் தனக்குக் குழந்தை உள்ளது என்பதை மறைமுகமாகச் சொல்லி மூர்த்தியைத் தன் பக்கம் அணுகாமல் பார்த்துக்கொண்டாள். மீறி வஸந்தாவை அவன் அடையச் செல்லும்போது மூர்த்தியின் மனசாட்சி அவனைத் தடுத்து நிறுத்துகிறது.

மேலும் கலையரசி என்ற பாண்டியனின் தங்கையை, நாட்டியம் கற்றவளை மாணிக்கம் பிள்ளைக்கு மணம் செய்துவைக்க முயற்சி செய்கிறார் வேலாயுதம். கலையரசிக்கும், பார்வதிக்கும் இதில் துளி கூட ஒப்புதல் இல்லை என்றாலும் வேலாயுதம் அவர்களை நெருக்கடிக்கு உள்ளாக்கிச் சம்மதிக்க வைக்கிறான்.

இந்நேரத்தில் மலேசியாவில் இருந்துச் சொத்துக்களை மீட்டு தன் வழக்கறிஞர் நண்பருடன் இந்தியா வருகிறான் பாண்டியன். வஸந்தா திருமணம், கலையரசிக்குக் கட்டாயத் திருமணம் ஆகியன பாண்டியனுக்குக் கோபத்தை ஏற்படுத்துகின்றன.

கலையரசி திருமணத்தைத் தடுத்து நிறுத்த பல வகைகளில் அவன் செயல்படுகிறான். இதற்கு ஆனந்தும் உதவுகிறார்.

மாணிக்கம் பிள்ளையின் விரோதம் இதனால் பாண்டியனுக்கு ஏற்படுகிறது. இந்நேரத்தில் ஆனந்த் தன்னுடைய மகன் என்பதையும் அவனை இளம்வயதில் காசியில் தவற விட்ட நிலையையும் அறிகிறார் மாணிக்கம் பிள்ளை.

கலையரசியைத் தன் மருமகளாகவும், ஆனந்தைத் தன் மகனாகவும் கொள்கிறார் மாணிக்கம்பிள்ளை. இதனிடையே வஸந்தாவின் கணவர் மூர்த்தி அவளைப் பாண்டியனிடம் சேர்க்கிறார். இவ்வாறு இந்நாடகம் மங்கலகரமாக நிறைகிறது.

இந்நாடகத்தில் மனச்சான்று பேசுவது போல சில காட்சிகள் அமைக்கப்பெற்றுள்ளன. நிழல் காட்சிகளாக முன்னர் நடந்த நிகழ்ச்சிகள் காட்டப்பெறுகின்றன. இதுபோன்ற பல உத்திகள் நாடகம் பார்ப்பவரைப் பரவசமூட்டுவனவாக உள்ளன.

இதன் காரணமாக இந்நாடகம் பல மேடைகளில் நடிக்கப் பெற்றது. பல வெளிநாடுகளில் இந்நாடகம் நடிக்கப்பெற்றுள்ளது. இந்நாடகம் படிக்கவும் நடிக்கவும் ஏற்ற இன்பியல் நாடகமாகும்.

இதனை இயக்கியும் எழுதியும் பெரி. சிவனடியான் பெருமை கொண்டுள்ளார்.

இவ்வாறு இவரின் காவிய, நாடகப் பணிகள் தமிழ் வளர உதவின.

படைப்புலகம்

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களை இரு பெரு வகையாகப் பிரிக்கலாம். அவற்றுள் ஒன்று மரபுக்கவிஞர்கள், மற்றொன்று புதுக்கவிஞர்கள். சில மரபுக் கவிஞர்கள் புதுக்கவிதை வடிவம் வந்துற்றபோதும் அதற்குள் நுழையாமல் மரபில் நிலைத்தார்கள். சில மரபுக் கவிஞர்கள் புதுக்கவிதையின் வருகையைப் பார்த்து, அதற்கு மாறித் தன்னை அதனில் வளர்த்துக்கொண்டார்கள். கவிஞர் பெரி. சிவனடியான் மரபுக்கவிஞர். தன்னைப் புதுக்கவிதைக்குள் புகுத்திக்கொள்ளாத மரபுக் கவிஞர். அவரின் மரபில் எளிமை, இனிமை. சிந்தனை நிறைந்திருக்கும். புதுக்கவிதைப் புயலில் மரபுக்கவிதைக் கப்பல் தரை தட்டாமல் காப்பாற்றிய நலமிகு கவிஞர்களில் ஒருவர் கவிஞர் பெரி. சிவனடியான்.

கவிஞர் பெரி. சிவனடியான் பாரதிதாசன் பரம்பரை, கண்ணதாசன் பரம்பரை என்ற நிலையில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டவர். இவர் புரட்சிக் கருத்துகளைப் பாவேந்தர் பாரதிதாசனிடமிருந்தும், பக்திநலத்தை, கவியோட்டத்தைக் கண்ணதாசனிடம் இருந்து எடுத்துக்கொண்டார். இருவர் தலைமையிலும் கவியரங்கேறியவர் கவிஞர் சிவனடியான். கவிஞர்கள் இருவரோடு கலந்து பழகிய நண்பர் பெரி. சிவனடியான். எனவே இருவரையும் தம் முன்னோடிகளாக் கொண்டு அவர் கவிதைகளைப் படைத்து முன்னேறினார்.

வாழ்க்கையில் விதி, பொருளாதார நெருக்கடி, குடும்பச் சுமை போன்ற பலவும் இவரின் முன்னேற்றத்திற்குத் தடைகளாக இருந்தபோதும் இவர் கவிதைத் தடியூன்றித் தளராமல் தைரியத்துடன் உலா வந்தார்.

கவியரங்கம் என்ற கலை வடிவத்தின் மரபுகளைக் காத்த கவிஞராகவும் இவர் விளங்கினார். பக்திப் பாடல்களை எழுதுவது,

தெய்வங்களைச் சரணடைந்து பாடுவது என்பது இவரின் இயல்புகளாகும்.

இவரின் கவியரங்கக் கவிதைகள் கவியரங்கம் என்ற இலக்கிய நிகழ்வு தேய்வுற்ற இக்காலத்தில் அந்நிகழ்வு எவ்வாறு நடைபெற்றது என்பதைக் காட்டும் பதிவேடுகள் ஆகின்றன.

இவரின் தனிக்கவிதைகள் பல சமுதாய சிந்தனைகளை உள்ளடக்கியவை. இவற்றில் ஏழ்மை, ஏற்றத்தாழ்வு போன்றன போக, போக்க வழி சொல்லப்பெற்றுள்ளன. மேலும் அவர்கவிதைகளில் வளமை, பண்பாடு காக்கப்பெற்றுள்ளன.

இவர் எழுதிய அருள்மிகு பரமகுரு சுவாமிகள் பதிகம், சக்கரை குருசுவாமியின் ஆன்மிக வாழ்வும் சபரி மலை யாத்திரையும் ஆகியன இவரின் அருள் அனுபவச்சான்றுகள்.

இவர் படைத்த முருகாஞ்சலி, சக்தியும் மைந்தனும், அமராவதிப் புதூர் அருள்மிகு கருப்பர் வழிபாட்டுப் பாடல்கள், சக்தி சரணங்கள், சக்தி விருத்தங்களும், சந்நிதி வெண்பாக்களும் ஆகியன இவரின் ஆழ்ந்த பக்தி ஈடுபாட்டை விளக்குவனவாகும்.

சிக்கலில் பாடியென் சிக்கலைத் தவிர்த்தேன்
பக்கத்து மயிலத்தில் பாடிக் களித்தேன்
மக்கள் நிறைந்திடும் மயிலை முருகனைச்
சிக்கெனப் பிடித்துச் செய்யுள் தனை வடித்தேன்

(பெரி. சிவனடியான், முருகாஞ்சலி, பழநிக் கந்தன்)

என்ற முருகாஞ்சலி பாடல் இவரின் முருக வழிபாட்டு ஈடுபாட்டைத் தெரிவிப்பது.

மேல் மருவத்தூர் ஆதிபரசக்தியின் அடியவராக இவர் தன்னைத் தன் நிறைவு நாட்களில் ஆக்கிக்கொண்டார். இவரின் மேல்மருவத்தூர் அனுபவத்தைப் பாடும் கவிதை பின்வருமாறு.

புற்று மண்டபத்தில் போயமர்ந்தோம் வரும்
பேரேட்டிற் காக நாம் காத்திருந்தோம்
உற்றநம் பேரை அழைத்தவுடன் ஓடி
உட்கார்ந்தோம் அம்மா அருகினிலே

தேவி அருள்வாக்கைப் பெற்றுக் கொண்டோம் -
பெற்றுச் சிந்தை தெளிந்து அமைதி கொண்டோம்
கோயில் உண்டியலில் காணிக்கையைக் கொட்டிக்
குங்குமம் வாங்கி அணிந்து கொண்டோம்

(பெரி. சிவனடியான், சக்தி சரணங்கள், ப.6)

என்ற பாடலின் வழி இவர் ஆதிபராசக்தியின் மீது கொண்டிருந்த அடிமைத் திறம் தெரியவருகிறது.

இவர் ஊர் அருகில் உள்ள சாக்கோட்டயில் அமைந்துள்ள கோயில் தெய்வமான உமையாம்பிகை பற்றிச் சக்தி விருத்தங்களும் சந்நிதி வெண்பாக்களும் என்ற நூலில் எழுதியுள்ளார்.

வீரசேகரர் துணையாய் விளங்குகிற உமையவளே
வீரவனம் ஆளும் தேவி
மேவு புகழ்ச் சோழர்குளம் எதிர்வந்தர்ந்துநீ
மிகப்பெரிய கோயில் கொண்டாய்
ஊரகத்தில் இருபத்திரண்டரைக் கிராமத்தார்
உன்னடியைச் சுற்றி வருவோம்
உன் பெயரை எங்கள் குலப் பெயராக்கிப் பிறக்கின்ற
ஒரு பெண்ணிற்கு இட்டழைப்போம்

என்ற இப்பாடலில் உமையம்பிகையின் பெருமையும் அதனை வணங்கும் கிராமத்தார் இயல்பும் சுட்டப்பெற்றுள்ளது.

சக்தியும் மைந்தனும் என்ற பக்தித் தொகுப்பில் குன்றக்குடி முருகனைப் பணியும் பாங்கு எண்ணத்தகுந்தது.

குன்றக் குடியினில்
கோயில் கொண்டாடிடும்
வண்ணமயில்வடி வேலன் குற
வள்ளி மணங்கொண்ட கோலன்
பங்குனி உத்தரம்
பார்த்துக் களித்திடும்
எங்கள் உமையவள் தீரன் தோன்றும
இன்னலுக்குப் பரிகாரன்

(பெரி. சிவனடியான், சக்தியும் மகனும், ப. 48)

என்று காவடிச்சிந்தில் பங்குனி உத்திரப் பெருவிழாச் சிறப்பினைப் பாடுகிறார் கவிஞர் பெரி. சிவனடியான்.

கருப்பர் போன்ற சிறு தெய்வங்களையும் வாழ்த்தும் பாங்குடையவர் கவிஞர் பெரி. சிவனடியான்

கன்னிமணம் காணாமல் கவலையுறின்
கழுத்துக்கோர் மாலை கொடுப்பாய்
கனியென்று முத்தமிடக் கையில் மகவில்லார்க்குக்
கவலையைத் தீர்த்துவைப்பாய்
பண்ணுகிற வணிகத்தில் பாதகம் நேராமல்
பகலிரவும் பக்கமிருப்பாய்
பக்தியுடன் பணிவோரின் குறைதீர்க்கும் கருப்பையா
பாதச் சிலம்பொலிப்பாய்

(அமராவதிப்புதூர், அருள்மிகு கருப்பர், வழிபாட்டுப் பாடல்கள்,ப. 7)

இவ்வாறு பக்தி சிறக்கப் பாடிய கவிஞராகப் பெரி. சிவனடியான் விளங்குகின்றார்.

குழந்தைகளுக்குப் பாடல்கள் எழுதும் ஏற்றமிகு கவிஞராகவும் அவர் விளங்கியுள்ளார்.

தமிழ்மொழி நம் தாய்மொழி
சரளமான வாய்மொழி
உலகம் போற்றும் ஒரு மொழி
உயர்வு நமக்குத் தருமொழி

குறளை எழுதித் தந்தது
கொள்ளை இன்பம் வந்தது
இரவும் பகலும் இனிப்பது
இதயம் ஒன்றாய் இணைப்பது

(பெரி.சிவனடியான், பாடி ஆடு பாப்பா, தமிழ்மொழி)

இவ்வாறு வாழ்நாள் முழுவதும் கவிதைக்காக தன்னை அமைத்துக்கொண்டவர் கவிஞர் பெரி. சிவனடியான். இவர் கவிதைகளை வெளியிட சில நிறுவனங்களே முன்வந்துள்ளன. விழுப்புரம் முத்துப் பதிப்பகம், காரைக்குடி செல்விப் பதிப்பகம் போன்ற பதிப்பகங்கள் முன்வந்துள்ளன. பிரபலமான

நிறுவனங்கள் ஏதும் இவரை நாடி வரவில்லை. இவரும் அவர்களை நாடிப் போகவில்லை. பிரபல புத்தக நிறுவனம் வெளியிட்டால் தான் கவிதை என்ற எல்லையை இவர் கைக்கொள்ளாமல் தன் கவிதைத் தரத்தால் நிற்க இவர் முயன்றுள்ளார். நாளும் முயன்று நல்ல தமிழ் மரபுகளைக் காத்த கவிஞர் பெரி. சிவனடியான் என்பதை இவ்வுலகம் நினைவில் கொள்ளும்.

துணைநின்ற நூல்கள்

கவிஞரின் படைப்புகள்

அவளுக்காக, செல்வி பதிப்பகம், காரைக்குடி, முதற்பதிப்பு, 1950 இரண்டாம் பதிப்பு 1962, மூன்றாம் பதிப்பு, 1997

வான்மதி, முத்துப் பதிப்பகம், விழுப்புரம், முதற்பதிப்பு 1997, இரண்டாம் பதிப்பு, 2000

சிவனடியான் கவியரங்கக் கவிதைகள், செல்வி பதிப்பகம், காரைக்குடி, முதற்பதிப்பு 1984.

பெரி. சிவனடியான் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம்,சென்னை முதற்பதிப்பு, 1998

கனிக்குவியல், முத்துப்பதிப்பகம், விழுப்புரம், முதற்பதிப்பு, 1955

அமராவதிப் புதூர், அருள்மிகு கருப்பர் வழிபாட்டு பாடல்கள், முதற்பதிப்பு 1993, இரண்டாம் பதிப்பு 1995,மூன்றாம் பதிப்பு, 2004

அருள்நின்ற பரமகுரு சுவாமிகள் வரலாறும் பதிகமும், 1994

சக்தியும் மைந்தனும், முத்துப்பதிப்பகம், விழுப்புரம் 1982

சக்தி சரணங்கள், சக்தி பக்தர்கள் , விழுப்புரம், 1982

அருள்மிகு அய்யப்பன் சரணக்கோவை,1988

முருகாஞ்சலி, திருமகள் இல்லம், மதுரை, 1976

சக்தி விருத்தங்களும், சந்நிதி வெண்பாக்களும், பரமகுரு பதிப்பகம், விழுப்புரம் 2000

முயல்வது மதி, முடிப்பது விதி, ஓம் சக்தி பப்ளிகேஷன்ஸ், விழுப்புரம், 2002

சக்கரைக் குருசுவாமியின் ஆன்மீக வாழ்வும், சபரிமலை பாதயாத்திரையும், அய்யப்ப பக்தர்கள், 1998பாடி ஆடு பாப்பா, முத்துப்பதிப்பகம், விழுப்புரம், 2000

படிக்க நடிக்க சிறுவர் கதைப்பாட்டு, முத்துப்பதிப்பகம், விழுப்புரம், காந்தி கலாநிலைய உயர்நிலைப்பள்ளி வரலாறு, காந்தி கலாநிலைய மாணவர் இலக்கிய மன்றம், எரிசினம்பட்டி,

அமரத்துவம் அடைந்த பெரி. விசாலாட்சி ஆச்சி முதலாண்டு நினைவு மலர்

பிறநூல்கள்

முத்துக்குமார சுவாமி, இருபதாம் நூற்றாண்டின் நூறு தமிழ்க்கவிஞர்கள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

விமலானந்தம், மது.ச. தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், தொகுதி. 2. ஐந்திணைப் பதிப்பகம், சென்னை




கவிஞர் சிவனடியான், பாவேந்தர் பாரதிதாசனோடும்
கவியரசு கண்ணதாசனோடும்





கவிஞர் பெரி. சிவனடியான் அவர்களின் படைப்புகள்



9 789388 265041